உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

திருத்தேவை எனும் திருவிராமேச்சுரத்தைச்
சார்ந்த பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளைப்
பழநிக்கு வாராதே என்ற நிகழ்ச்சியும்
அவர்கள் இயற்றியருளிய

சண்முக கவசமும்
பஞ்சாமிர்த வண்ணமும்

அடங்கிய

நூற்றாண்டு விழா மலர்

தொகுப்பாசிரியர்:

A. கிருஷ்ணசாமி

*

மஹா தேஜோ மண்டல சபை வெளியீடு

முதல் பதிப்பு : நவம்பர் 1991 2000 படிகள்

பொருளுதவி

I. O. C., B. P. C., H. P. C., ஆகிய எண்ணெய் நிறுவனங்களின் ஒப்பந்தக்காரரும் (Contractors) விநியோகஸ்தரு (Dealers) மான, பெங்களூர் திரு. கோவிந்தசாமி நாயுடு அவர்களும் அவருடைய குமாரர் திரு. ஜோதியும் சேர்ந்து அளித்த மூலதனத்தைக் கொண்டு இந்நூல் வெளியிடப்படுகின்றது.

விலை : ரூ. 6-00

அச்சிட்டோர்:
கணேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-4.

மஹாதேஜோ மண்டல சபையின் செயல் திட்டம்

டாக்டர் M.K. விஸ்வேஸ்வரன்
M.S; F.I.C.S. F.I.C.A; F.I.M.S.A.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் கி.பி. 1926 ஆம் வருடம் ஜூலை 17ஆம் நாள் மஹாதேஜோ மண்டல சபையை அமைத்துப் பதிவு செய்தார்கள். இச்சபை இருபத்தொரு பெயர்கள் கொண்ட ஒரு குழுவாகும். இதினின்றும் ஒன்பது பேர்களை நிர்வாகக்குழுவெனத் தேர்ந்தெடுத்தார்கள். சுவாமிகள் இச் சபையை நிறுவியதன் நோக்கம் தாம் எவ்வாறு மயூரவாகன சேவன விழாவை நடத்தி வந்தார்களோ அவ்வாறே சந்திரசூரியர் உள்ளவரை நடத்திவர வேண்டும் என்பதும், தாம் ஆறுமுகனுக்கு எவ்வாறு பூசைகளையும், விழாக்களையும் நடத்தி வந்தார்களோ அவ்வாறே நடத்தி வரவேண்டும் என்பதும், தாம் எழுதிய நூல்களைப் பாதுகாத்துப் புதிய பதிப்புக்களை வெளியிட வேண்டும் என்பதும், தம் கொள்கையையாதும் கூலி பெறுது இயன்றவரை பரப்பி வரவேண்டும் என்பதும் ஆகும். சுவாமிகளுடைய நோக்கம் அவர்கள் சமாதி அடையும் காலம் வரை நன்கு நிறைவேறியது. சுவாமிகள் சமாதியானதற்குப் பின்பு மஹாதேஜோ மண்டல சபை சுவாமிகளின் நோக்கத்தை ஓரளவு நிறைவேற்றி வந்தது.

சுவாமிகளின் அடியார்கள் சிலர் மிகுந்த பக்தியின் காரணமாகக் கோயில் கட்டுதல், நூல்கள் வெளியிடுதல், விழாக்கள் நடத்துதல், சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற பல நல்வினைகளைச் செய்து வருகிறார்கள்.

இச்சூழ்நிலையில் சுவாமிகள் அமைத்த சபையின் மூலம் அவர்கள் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் மஹாதேஜோ மண்டல சபைக்குப் புத்துயிரளித்து இயக்க முனைந்துள்ளோம். இதன் அடிப்படையில், சுவாமிகளின் கருத்தைப் பரப்புவதற்காகப் பேராசிரியர் டாக்டர் ப. இராமன் அவர்களின் சொற்

பொழிவை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் மாலை 6—7-30 மணிவரை திருவான்மியூர் மயூரபுரம் சுவாமிகள் சமாதி நிலையத்திலேயே நடத்தி வருகின்றோம். இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் தொடங்கிய இவ்வகுப்புச் சிறிதும் தவறுமல் நடந்து வருகின்றது. இதுகாறும் சுவாமிகள் பாடல்களுக்கு எளிய முறையில் விளக்கம் கிடைக்கவில்லையே என ஏங்கியிருந்த பாம்பனடியார்களுக்கு இஃது ஓர் நல்வாய்ப்பாகும். அன்பர்கள் பலபேர் கலந்து கொண்டு பயன்பெற்று வருகிறார்கள். பேராசிரியர் யாதொரு கூலியும் பெறாது இப்பணியைச் செய்து வருவது தம் குருநாதர் கொள்கையை அவர் எத்துணை உறுதியாகப் பின்பற்றி வருகின்றார் என்பதற்கோர் சான்றாகும்.

சண்முக கவச நூற்றாண்டு நிறைவை ஒட்டி ஒருநாள் முழுதும் அகண்ட பாராயணத்திற்கு ஏற்பாடு செய்தோம். சுவாமிகள் பாடல்களைப் பாடி வருபவர்களுக்கும் ஒலி நாடாவில் பாடியவர்களுக்கும், கருத்துக்களைப் பரப்பி வருபவர்களுக்கும் இவ்விழாவில் சிறப்புச் செய்தோம். பல சுவாமிகளும், அரசு மேலதிகாரிகளும், கவிஞர்களும், புலவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாண்புமிகு D. ராஜு அவர்களும் மாண்புமிகு K. வேங்கடசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சுவாமிகளின் நூல்களை வெளியிடுவதும் சபையின் முக்கிய பணியாகும் என்ற முறையில் கந்த சஷ்டி விரதப் பாராயண நூல் திரட்டு வெளியிட்டோம். இப்போது, சண்முக கவசம், பஞ்சாமிர்த வண்ணம் நூற்றாண்டு மலர் வெளியிடுகின்றோம் அவ்வப் போது, திருப்புகழ் பஜனை விழாக்கள் பூசைகள் ஆகியவற்றையும் சுவாமிகள் விரும்பியபடியே குறைவின்றி நடத்தி வருகின்றோம். சுவாமிகள் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற எங்களுடன் அன்பர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

அன்பன்

M. K. விஸ்வேஸ்வரன்

C. V. சதானந்தம் (I.O.C.)

கண்டதும், கேட்டதும்

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய சண்முக கவசத்தை ஓதிப் பலனடைந்தவர் பலருள் ஒரு சிலரின் அனுபவத்தைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

1) மரணத்திலிருந்து காப்பாற்றியது

சென்னை, இராயப்பேட்டை புதுப்பாக்கம் பெருமாள் முதலி தெருவு "கவுரிபாக்" இல்லத்தில் வசித்துவந்த திரு. P. நடராச முதலியார், திருமதி கனகாம்புஜம் நடராஜன் தம்பதிகளின் இரு புதல்வர்—திரு. P. N. லோகநாதன் திரு. P. N. நமசிவாயம்—குழந்தைப்பருவத்தில் முறையே 1936 & 1939 வருடங்களில் மிகுந்த நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவர்களின் பெற்றோர் பக்தியோடு சண்முக கவசத்தை ஓதிய தால் அவர்களை மரணப்பிடியிலிருந்து விடுவிக்க முடிந்தது. மருத்துவர்களால் கைவிடப்பட்ட திரு. லோகநாதன் எந்த நேரத்திலும் இறந்து விடுவார் என்ற நிலையில் இருந்த தினத் தன்று அவரின் தகப்பனர் திரு. P. நடராச முதலியார் பாம்பன் சுவாமிகள் சமாதி கோயிலில் அன்று நடைபெற்ற மயூரவாகன சேவன விழாவில் கலந்து கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக சண்முக கவசத்தை ஓதிய போது அவ்விழா விற்கு வருகை தந்த ஒரு சிறந்த மருத்துவர் Dr. வாசு அவர்களைத் தற்செயலாக சந்தித்து அவ்விடு வரும் பூஜை முடிந்தவுடன் புதுப்பாக்கம் வீட்டிற்குச் சென்று பாம்பன் சுவாமிகள் குருவருள் துணைகொண்டு Dr. வாசு கொடுத்த மருத்துவ சிகிச்சையால் குழந்தையான திரு P.N. லோக நாதன் பிழைக்கப் பெற்றார்.

அதுபோலவே திரு. முதலியாரின் மற்றொரு புதல்வர் P. N. நமசிவாயத்தை அதிக காய்ச்சல் பிணியிலிருந்து காப்

பாற்ற அவர்களின் குடும்ப மருத்துவர்கள் இயலாமலிருந்த தருணத்தில் அவரைச் சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் இரவு நடுநிசியில் சேர்த்து அவருடைய தாயார் திருமதி கனகாம்புஜம் நடராசன் இடைவிடாது சண்முக கவசத்தை ஓதியிருந்தபோது அந்த அகால நேரத்தில் தற்செயலாக வந்த தலைமை மருத்துவர் Dr. சங்கரன் அவர்கள் குழந்தையைப் பரிசோதித்து மருத்துவ சிகிச்சைசெய்து மரணத்திலிருந்து காப்பாற்றினர்.

திரு. P.N. லோகநாதன் சென்னை இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் நிறுவனத்தில் மேலாளராக சமீபத்தில் ஓய்வு பெற்றவர். திரு. P.N. நமசிவாயம் சென்னை உரத் தொழிற்சாலை (M.F.L.) நிறுவனத்தின் தற்போது விற்பனை விநியோக மேலாளராகப் பணிபுரிகின்றார்.

2) திருமணம்

தமிழ்நாடு விருதுநகர் திரு S.P.G.C. அசோகன் திருமதி சாரதா தம்பதிகளின் மகள் திருமணம் 1985 வருடத்தில் நடைபெற்றதற்கு முக்கிய காரணம் அவர்கள் பக்தியுடன் ஓதிய சண்முக கவசம். திருமதி சாரதா அசோகன் அவர்கள் 16-3-85 தேதியில் திரு C.V. சதானந்தன் (முதுநிலை மேலாளர் இந்தியன் ஆயில் நிறுவனம்) அவர்களுக்குக் கீழ்க் கண்டவாறு எழுதியுள்ளார்கள். ''மதிப்பிற்குரிய சதானந்த சுவாமிகளுக்கு தங்களது அருள்வாக்கின்படியே சண்முக கவசத்தின் மகிமையை நான் கண்ணாரக் கண்டேன். நானும் நீங்கள் கூறியதுபோலவே சண்முக கவசத்தை விடாமல் பாராயணம் செய்ததினால் எனது மகளுக்குச் சிறந்த மண மகன் கிடைத்திருக்கிறார்''.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயர்ந்த கருத்தினால் சண்முக கவசமும் அதன் விரிவுரையையும் சிறந்த நூல் வடிவமாக அச்சிட்டு 3000 பிரதிகளை

மேற்படி SPGC அசோகன் தம்பதிகள் தங்கள் குணமலே நிறுவன மூலமாக இலவச வெளியீடாக அளித்துள்ளார்கள்' என்ற செய்தி காண்க.

3) கொடிய விஷ கட்டுவிரியன் பாம்பிலிருந்து விடுபடுதல்

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தில் காவல் துறை ஆய்வாளராகப் பணிபுரிந்த திரு. R. பலராமன் அவர்கள் திரு. C. V. சதானந்தம் அவர்களுக்கு 17-10-84 தேதியன்று கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதியுள்ளார்கள்.

"On 16-10-84 morning I went to Pirappan Valasai Pamban Swamigal Temple and had dharson. I am always reading "Shanmugha Kavacham". It actually saved me. On the same day of my visit to Pirappam Valasi Temple when I returned to my room at 9-30 p.m. my constable opened my room and I went inside and switched on the lights. To my surprise, a snake கட்டுவிரியன்-deadly poisonons-was lying at the entrance 'Vasakal'. With the help of my staff the snake was killed. The effect of reading 'Shanmughakavacham" only saved me from the snake, Otherwise I would have walked over the snake it would have killed me. Many thanks for your guidance". என்ற செய்தியும் காண்க.



சண்முக கவச நூற்றாண்டு விழா
மங்கல வாழ்த்து

(கவியோகி, அருட்கவியரசு தவத்திரு ஸ்ரீ கருமாரி தாச சுவாமிகள் அருளியது)

கண்மணியாய்க் குருமணியாய்க் கண்ணுதற்கு
மறைமொழியை விரித்த நாதன்
தண்டமிழைக் கேட்டுவக்கும் சண்முகனார் திருவருளும்
அருணை நாதன்
விண்ணருளும் பெற்றோங்கும் குமரகுரு தாசரவர்
திருவடிக்கு
எண்ணற்ற வந்தனமும் போற்றிசைத்தே எஞ்ஞான்றும்
இன்பங் காண்பேன்.

பாரதத்தின் தென்கோடிப் பதிவந்து பைந்தமிழும்
மறையு மோர்ந்து
நாரதரும் சுகமுனியும் அருணகிரி நக்கீரன்
நெறியு ணர்ந்தே
பாரதமாப் புவியோங்க பஞ்சாமிர்த வண்ணமுடன்
பாக்கள் பாடி
மாரதரும் நிதம்போற்றும் சண்முகமாம் கவசத்தை
அருளிச் செய்தோய்!

சீராறு முகவனருள் வெள்ளத்தில் தினந்தோறும்
மிதந்து வந்து
ஓராறு மண்டலமும் ஆறாயிரத் தறுநூறு
அறுபத் தாறு
ஏராறால் மறைமொழியாய் கவியருளும் எம்மண்ணால்!
இன்பச் சீல!
பேராரும் குமரகுரு தாசமுனி நின்னாமம்
வாழி! வாழி!

சண்முக கவசமின்றித் தரணியில் மந்த்ர மில்லை
உண்முகம் நோக்குநர்க்கே அறுமுகன் அருளுங் கூடும்
பண்தமிழ் மறையுணர்த்தும் பாம்பனார் நெறியில் நின்று
விண்ணவர் போற்றும் வாழ்வை விரைவினில் பெறலா
மன்றே.
சண்முகமாக் கவசத்தின் நூற்றாண்டுப் பெருவிழாவைக்
கண்ணுற்றோர் பாவந் தீரும்
சண்முகமாக் கவசத்தின் நூற்றாண்டு விழாவிலுரை
யாற்றுநரின் குறைகள் தீரும்
சண்முகமாக் கவசத்தின் நூற்றாண்டு விழா நடத்தும்
அன்பர்க்கு வாழ்வே கூடும்
சண்முகமாக் கவசத்தின் நூற்றாண்டு விழாப் பெருமை
சாற்றுவோர்க்கு முருகன் காட்சி.

அகரமுதல் னகரம்வரை முப்பதுமா மந்திரச்சீர்
அமைத்துத் தந்த
இகபரத்தி னின்புற்று உயிர்வாழத் தவம்புரிந்த
எந்தை சீர்த்தி
அகத்திருத்தி சீரியற்றும் ஈரன்பர் விஸ்வேசன்
கிருஷ்ண சாமி
அகத்துணர்வ நெறியோங்கு குமரகுரு தாசரருள்
பெற்று வாழி!

வேறு

அறுமுகன் அருள்சி றந்த அண்டமும் அவனி வாழி!
குறுமுனி விரித்து ரைத்த கோதிலா நெறியும் வாழி!
பெறுகின்ற பேற னைத்தும் சண்முகக் கவசம் நல்கும்
உறுவகை தந்த பாம்பன் குருதாசர் அடியார் வாழி!

(ஒப்பம்) அருட்கவியரசு-
11—11—1991 தேவி கருமாரி தாசர்

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ப. இரரமன், எம்.ஏ; பிஎச் டி.,

பாம்பன் ஸ்ரீமத் குமரதாச சுவாமிகள் அதி இளமைப் பருவத்திலேயே அறுமுகன் அருளை நாடி நின்றார்கள். அப் பெருமான் திருவருளால்இவர்கள் நாவில்தோன்றிய ''கங்கை யைச் சடையிற் பரித்து'' எனும் மங்கல மொழித் தொடரை வைத்துப் பாடியருளிய முதற்பாடலிலேயே இவர்களுக்குத் துறவு வேட்கை விஞ்சியிருந்ததை உணரலாம். மணப்பருவம் எய்திய காலத்தில் கருமக் கழிவாக இல்லறம் ஏற்றார் களேனும் இவர்கள் பழநிக்குச் சென்று துறவு பூணக் கருதிய நிகழ்ச்சியே இவர்களுக்குத் துறவிலேயே நாட்டம் இருந்தது புலனும். ''பழநிக்கு வர இஞ்ஞான்று அருளவில்லை; அருள் வேம் அந்நாள் பந்தம் அற வருதி'' எனப் பண்ணவன் பணித்த நிகழ்ச்சி நடந்து ஒரு நூற்றாண்டுக்காலமாகி விட்டது. ஆன்ம லாபம் கருதி ஒரு பொய் சொன்னார்கள். அதைக் கருதியும் பொய் சொல்லலாகாது என இறைவன் கட்டளையிட்டருளினர். ஆதலால் தம் வாழ்க்கை முழுவதும் சத்தியத்தையே கடைப்பிடித்தார்கள். சுவாமிகளைப் பின் பற்றும் அடியார்களும் சத்தியத்தையே கடைப் பிடிக்க வேண்டும் என்பதற்கு இந்நிகழ்ச்சியை எப்போதும் நினைவு கூர்தலும் விழாக்கொண்டாடுதலும் நூலாக வெளி யிடுதலும் அவசியமே. சண்முக கவசமும் பஞ்சாமிர்த வண்ணமும் போல் ஒரு கவசத்தையும் ஒரு வண்ணத்தையும் காணலரிது. நித்திய பாராயணத்திற்குரிய இவ்விரு தோத் திரங்களை இயற்றியருளி ஒரு நூற்றாண்டுக் காலம் ஆகி விட்டது. கோடிக்கணக்கான அன்பர்கள் இவற்றை ஓதிப் பயன் அடைந்திருப்பார்கள். இவற்றின் அருமை பெரு மைகளை உலகிற்கு உணர்த்த நூல் வெளியிடலும் விழாக்கள் எடுத்தலும் அவசியமே. மேற்கண்ட மூன்றனையும் அத்துடன் பாலசுந்தர சுவாமிகள் இயற்றியருளிய வடமொழித் தோத் திரத்தையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ள தொகுப்பாசிரியர் பெரியவர் திரு A. கிருஷ்ணசாமி அவர் களுக்குத் தமிழ் உலகம் கடமைப்பட்டுள்ளது. அன்னார் தம் இறைவன் தொண்டு சிறக்க வேலிறைவினை இறைஞ்சு கின்றேன்.

அன்பன்

13.11-91

ப. இரரமன்

முன்னுரை

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் கி. பி. 1948 ஆம் ஆண்டில் திருத்தேவை என்னும் திருவிராமேச் சுரத்தில் அகத்திருப்பணி வேளாளர் குலத்து வந்த சாத்தப்பப் பிள்ளைக்கும் செங்கமலத்தம்மையாருக்கும் தவப் புதல்வராக வந்து உதித்தார்கள். இவர்கள் பிள்ளைத் திருப் பெயர் அப்பாவு என்பதாகும். சேஷகிரிராயர் என்னும் நல்லோர் இவர்களுக்கு வழங்கிய பெயர் குமரகுருதாசர் என்பதாகும். இப்பெயரே நிலைத்து விட்டது சுவாமிகளின் சொந்த ஊர் திருவிராமேச் சுரத்தைச் சார்ந்த பாம்பன் ஆகும். தற்காலத்து அடியார்கள் ஊர்ப் பெயரை வைத்துப் பாம்பன் சுவாமிகள் என அழைத்து வருகின்றார்கள்.

முன்னைத் தவத்தின் தொடர்ச்சியால் சுவாமிகள் இப் பிறப்பில் அதியிளமைப் பருவத்திலேயே துறவுள்ளமும் ஞான நாட்டம் கொண்டு விளங்கினார்கள். ஞான சொரு பஞன கந்தவேள் ஒருவனையே வந்தித்துச் சிந்தித்து வந்தார்கள். அப்பெருமான் மீது சாத்திர தோத்திர வடிவ மாக 6666 பாடல்களையும் 32 வியாசங்களையும் இயற்றியருளி ஞர்கள். செவ்வேட் பரமன் அருளையே தம் திருமேனியாகக் கொண்ட சுவாமிகளின் பாடல்கள் மந்திரங்களாகும்.

சுவாமிகள் ஆன்ம இலாபம் கருதிப் பழநிப்பதி செல் வதற்குத் தமக்கு அறுமுகன் உத்தரவு கிடைத்துவிட்டதாக ஒரு **பொய்** சொன்ஞர்கள். கரவருடம் (கி.பி, 1891) ஆடி மாதத்துச் சுக்கிரவாரம் மாலைப் போதில் இளம் பூரணன் இவர்கள் முன் தோன்றி ஏன் பொய் சொன்ஞய்? பழநிக்கு வருக எனும் கட்டளையை யான் பிறப்பிக்கும் வரை வராதே என்று கூறிக் கோபித்த நிகழ்ச்சி போல் ஒன்று வேறு எந்தத் துறவியர் வாழ்விலும் நிகழவில்லை. அடியார்கள் அன்று

முதல் சத்தியத்தை உறுதியாகக் கடைபிடித்தார்கள். இவ்வாண்டான கி.பி. 1991. ஆடியுடன் ஒரு நூறுண்டு நிறைவுறுகின்றது. இதனைச் சிறப்பாக அடியார்கள் நினைவு கூர்ந்து தாங்களும் சத்தியத்தைத் தவறுமல் கடைப் பிடித்து வர வேண்டும் என்பதற்காகவே இந்நிகழ்ச்சியைக் கொண்டாடுகிறோம்.

சண்முக கவசத்தைக் கி.பி. 1891 ஆண்டு கர வருடம் கார்த்திகை மாதம் 8-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பாடியருளினார்கள். தமக்கு ஏற்பட்ட ஓர் அல்லலில் இருந்து நீங்குதற் பொருட்டாகவே இது பாடப் பெற்றது. இன்று கோடிக் கணக்கானோருடைய அல்லலைத் தீர்த்துவரும் மகா மந்திரமாக விளங்குவதை அன்பர்கள் அறிவர், பஞ்சாமிர்த அபிடேகம் செய்ய வசதியில்லாதவர்களும் இவ்வண்ணத்தைப் பாடினாலேயே அந்த அபிடேக பலன் கிடைக்குமாறு சுவாமிகள் பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணத்தைப் பாடியருளினார்கள். கி.பி. 1891 ஆம் ஆண்டு கரவருடம் கார்த்திகை மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பாடியருளினார்கள். திருவனந்தபுரம் ந. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கிசைந்தே சுவாமிகள் இவ்வண்ணம் பாடியருளினார்கள். இவ்விரு நூல்களையும் பாடியருளிய கால முதல் இன்று வரை ஒரு நூறுண்டு நிறைவுகின்றது. ஆகையால் இம் மூன்றனையும் நினைவு கூரவே மகாதேஜோ மண்டல சபை இந்நூலை வெளியிட முன்வந்தது. பேராசிரியர் ப.இராமன் அவர்கள் நூல் செவ்வையாக அமைய முழுஉதவி செய்தமைக்கு நன்றி. கணேஷ் பிரிண்டர்ஸ் இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் நன்கு அச்சிட்டு உதவியமைக்கு நன்றி.

இவண்

A. கிருஷ்ணசாமி

குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நம :
ஓம் ஷண்மத பதயே நமோ நம :
ஓம் ஷட்கிரீவ பதயே நமோ நம :
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நம :
ஓம் ஷட்கோண பதயே நமோ நம :
ஓம் ஷட்கோச பதயே நமோ நம :
ஓம் நவநிதி பதயே நமோ நம :
ஓம் சுபநிதி பதயே நமோ நம :
ஓம் நரபதி பதயே நமோ நம :
ஓம் சுரபதி பதயே நமோ நம :
ஓம் நடச்சிவ பதயே நமோ நம :
ஓம் ஷடக்ஷர பதயே நமோ நம :
ஓம் கவிராஜ பதயே நமோ நம :
ஓம் தபராஜ பதயே நமோ நம :
ஓம் இகபர பதயே நமோ நம :
ஓம் புகழ்முனி பதயே நமோ நம :
ஓம் ஜயஜய பதயே நமோ நம :
ஓம் நய நய பதயே நமோ நம :
ஓம் மஞ்சுள பதயே நமோ நம :
ஓம் குஞ்சரீ பதயே நமோ நம :
ஓம் வல்லீ பதயே நமோ நம
ஓம் மல்ல பதயே நமோ நம :

ஓம் அஸ்த்ர பதயே நமோ நம :
ஓம் சஸ்த்ர பதயே நமோ நம :
ஓம் ஷஷ்டீ பதயே நமோ நம :
ஓம் இஷ்டி பதயே நமோ நம :
ஓம் அபேத பதயே நமோ நம :
ஓம் ஸுபோத பதயே நமோ நம :
ஓம் வ்யூக பதயே நமோ நம :
ஓம் மயூர பதயே நமோ நம :
ஓம் பூத பதயே நமோ நம :
ஓம் வேத பதயே நமோ நம :
ஓம் புராண பதயே நமோ நம :
ஓம் ப்ராண பதயே நமோ நம :
ஓம் பக்த பதயே நமோ நம :
ஓம் முக்த பதயே நமோ நம :
ஓம் அகார பதயே நமோ நம :
ஓம் உகார பதயே நமோ நம :
ஓம் மகார பதயே நமோ நம :
ஓம் விகாச பதயே நமோ நம :
ஓம் ஆதிபதயே நமோ நம :
ஓம் பூதி பதயே நமோ நம :
ஓம் அமார பதயே நமோ நம :
ஓம் குமார பதயே நமமோ நம :

(குமாரஸ் தவத்தை மனனம் செய்க)

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சோடச நாமார்ச்சனை

வடமொழியிலும் — தமிழிலும்

சுபே சோபனே முகூர்த்தே அத்ய சர்வ சுபதினே அஸ்மத் குருமூர்த்தே: அபராருண பாம்பன் ஸ்வாமின: பாதார விந்தயோ: அஸ்மதா தீனும் பக்த ஜனுனும் ஸர்வாபீஷ்ட ப்ரதாத்ருத்வ ஸித்தியர்த்தம் ஷோடச நாமார்ச்சனம் கரிஷ்யாம:

(மங்களகரமான வாழ்த்துக்குரிய இந்த நேரத்தில் எல்லா நலன்களையும் நல்கும் இந் நன்நாளில், நமது குருமூர்த்தியாம் இரண்டாம் அருணகிரியாகிய ஸ்ரீ பாம்பன் அடிகளாரது திருவடித் தாமரை மலர் களில் அடியேனை உள்ளிட்ட அடியார்கள் அனைவரது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற்றும்படி பதினாறு திருநாமங்களால் போற்றும் வழிபாட்டினை செய் கிறோம்.)

ஓம் மஹா தேஜோ மண்டலாச்சார்ய ஸ்ரீமத்
பாம்பன் குமரகுருதாஸ ஞான தேசிகாய நம:

ஓம் மஹா தேஜோ மண்டல ஆசிரியரான பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச ஞானுசிரியருக்குப் பெரு வணக்கம்.

ஓம் ஜடாமஸ்தக காஷாயாம்பர பஸ்ம ருத்ராக்ஷ
தாரண திவ்ய மங்கள விக்ரஹாய நம:

ஓம் சடைமுடியும் காவியுடையும் திருநீறும் கண்டிகையும் தரித்த திவ்ய மங்கள மூர்த்திக்குப் பெரு வணக்கம்.

ஓம் பாஹ்யாப் யந்தர விஷயாபி லாஷ் சூன்ய
தன்ய புருஷாய நம:

ஓம் புறப்பற்று அகப்பற்றுன விடயப் பற்றுச்
சிறிதும் இல்லாத மகாபுருஷருக்குப் பெருவணக்கம்.

ஓம் தமோ மண்டலாதி தூராய நம:

ஓம் த்மோ மண்டலத்தவர்களால் எட்ட முடியாத
அதிதூரத்தில் உள்ளவருக்குப் பெருவணக்கம்.

ஓம் ஹ்ருதயாம் போஜ மத்ய குஹ மந்திராநுபவ
ரஸிகர்ய நம:

ஓம் இதயத்தாமரை நடுவில் கோயில் கொண்ட
குஹமந்திர அனுபவத்தை ரசிக்கின்றவருக்குப்
பெருவணக்கம்.

ஓம் பிரணவ பரம்பராகதாய நம:

ஓம் பிரணவ பரம்பரை வழி வந்தவருக்குப் பெரு
வணக்கம்.

ஓம் தகராலய ரகஸ்ய சாஸ்த்ர ப்ரதர்ஸகாச்சார்யாய நம:

ஓம் தகராலய ரகசிய சாஸ்திர நூல் ஆசிரியருக்குப்
பெரு வணக்கம்.

ஓம் திருப்பா பாஷ்ய கர்த்ரேண் நம:

ஓம் திருப்பாப்பேருரை வகுத்த பேராசிரியருக்குப்
பெரு வணக்கம்.

ஓம் ஏகபத்ய பஞ்ச விம்ஸத் யித்தர ஸதபங்க்யா ப்ரதர்ஸித
அமானு சக்தி விஸ்மித பண்டித வந்திதாய நம:

ஓம் ஒரே செய்யுளில் 125 பாக்கள் அடங்கிய பஞ்ச விம்சதி அதிக சதபங்கியை இயற்றிய மக்களாற்ற லுக்கு மேம்பட்ட பேராற்றலைக் கண்டு விம்மித முற்றுப் பண்டிதர்களும் போற்றுபவருக்குப் பெரு வணக்கம்.

ஓம் ஷண்முக கவசாதி க்ரந்த ப்ரவர்த்தகாய நம:

ஓம் சண்முக கவசம் முதலிய நூல்களை இயற்றிய வருக்குப் பெரு வணக்கம்.

ஓம் ஷட்ஷஷ்டி ஷட்ஸ தோத்ர ஷட்ஸஹஸ்ர பத்ய ப்ரதர்ஸித குமார பரமேஸ்வரைக ஸமர்ப்பித சித்தாய நம:

ஓம் ஆறுயிரத்து அறுநூற்று அறுபத்தாறு தோத் திரப் பாக்களை இயற்றி குமார பரமேஸ்வரனுக்கே உரிமையாக்கிய சித்த புருஷருக்குப் பெருவணக்கம்.

ஓம் பஹு மூர்த்தீனும் பஹ்வீஸ்வர புத்யா வந்தன நிரா கரண பூர்வக ஏகேஸ்வர குமாரகுரு வந்தனேன ஸர்வ தேவதா வந்தன ப்ரதர்ஸகாய நம:

ஓம் அநேக இறை மூர்த்தங்களை வழிபடுவதை விட்டொழித்து, ஏகேஸ்வரனான குமாரகுரு ஒருவனையே வந்தித்தால், அவ்வழிபாடானது தெய்வங்கள் அனைத்தையும் வணங்கியதாகும்என்று அருளியவருக்குப் பெரு வணக்கம்.

ஓம் ஸ்வஸிஷ்யாணும் ஷடக்ஷர மந்த்ர தண்ட த்யான கிரீட தானேனச முக்தி நகர ப்ரவேசகாய நம:

ஓம் தமது சீடர்களுக்குச் சடக்கர மந்திரக்கோலும் தியான முடியையும் உதவி, முத்தி நகரத்தில் குடியேற வைப்பவருக்குப் பெருவணக்கம்.

ஓம் தன, வயோ, வித்யா விருத்த ஸேவித ஞான விருத்தாய நம:

ஓம் செல்வத்திலும், வயதிலும், கல்வியிலும் மூத்தவர்களும் சேவிக்கும் ஞானப் பெரியாருக்குப் பெருவணக்கம்.

ஓம் ஸ்வ ஸேவாகத ஸகல ஜன துஃக நிவர்த்த காய நம:

ஓம் தம்மை சேவிக்கும் மக்கள் அனைவரது வருத்தங்களையும் நீக்கி அருள்பவருக்குப் பெருவணக்கம்.

ஓம் ஸ்ரீ சென்னபுரி தக்ஷிண வான்மீகி தப ப்ரஸாதித ப்ரணவாகார மயூரபுர வாஸினே நம:

ஓம் சென்னைத் திருநகரின் தென்பால் வான்மீக முனிவர் தவம் செய்து அருள்பெற்ற பிரணவத் திருவுருவான மயூரபுரத்தை வாசஸ்தலமாக்கிக் கொண்டுள்ளவருக்குப் பெருவணக்கம்.

மஹா தேஜோ மண்டல குரு அபராருணகிரி சுத்தாத் வைத வைதீக சைவசித்தாந்த ஞானபாநு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாஸ முனீந்த்ர சரணாரவிந்தயோ: நாநாவித பரிமள மந்த்ர புஷ்பாணீ ஸமர்ப்பயாமி.

மஹாதேஜோ மண்டலகுரு உபய அருணகிரி, சுத்த அத்துவித வைதீக சைவ சித்தாந்த ஞான பானுவாகிய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச முனீந்திரரது திருவடித் தாமரைகளுக்கு நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ போன்ற நான்கு வித மணமிக்க மந்திர மகிமையுடைய மலர்களைச் சமர்ப்பிக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஓம் சாந்தி, சாந்தி, சாந்திஹி!

ஓம்

“பழநிக் கோயில் வர இன்றுஞான்று அருளவில்லை அருள்வேர் அந்நாள் பந்தமற வருதி”

சுவாமிகள் ஒரு நாள் தம் நண்பர் அங்கமுத்துப் பிள்ளையிடம் தாம் அன்றைக்கு மறுநாள் பழநிக்குச் செல்ல இருப்பதாகக் கூறினார்கள். அவர், திரும்பி எப்போது வருவீர்கள் என்று கேட்டார். ‘அது சொல்ல இயலாது’ என்றார்கள் சுவாமிகள். இவர்கள் துறவு நோக்குடன் செல்வதாக ஊகித்துணர்ந்து நண்பர் அதைத் தடுக்க நினைத்தார். நினைத்துத் தங்களுக்குப் “பழநிக்கு வர உத்தரவு முருகப் பெருமானிடம் இருந்து கிடைத்ததா”? என்று கேட்டார். இவர்கள் ‘ஆம்’ என்று ஒரு பொய் சொன்னார்கள். நண்பர் அதற்குமேல் ஏதும் பேசவில்லை. சுவாமிகள் அன்று பிற்பகல் தம் வீட்டின் மேன்மாடியில் இருந்துகொண்டு ‘அமரர்கோ’ என்னும் பிரபந்த முதல் ‘அமிர்தமதி’ என்னும் தொடக்கத்துப் பத்துவரையிலும் பாடியுள்ள பாட்டுக்களைத் “தேவனே இவற்றை நீ கேட்டருளல் வேண்டும்; யான் நாளை இவ்வூரை விட்டுத் துறவற நிலையை அடையவுள்ளேன்” எனச் சிந்தித்துப் படித்து முடித்துத் தென்புறம் திரும்பியவுடன் எதிர்முகமாக இறைவன் தோன்றி இவர்கள், ‘முருகப் பெருமானது உத்தரவு கிடைத்துவிட்டதா’? என்று நண்பர் கேட்டதற்கு ‘ஆம்’ என்று சொன்ன பொய்யையும் பிற தருமங்களையும் தம் திருவுளத்தடைத்து, “எனது கட்டளை என்று ஏன் பொய் கூறினை என்று தனது வலக்கரச் சுட்டு விரலை நிமிர்த்து அசைத்துப் பல்லைக் கடித்து அச்சுறுத்திக் கோபிப்பதை ஆசிரியர் கண்டு தம்முடைய கண்களை மூடிக் கொண்டு உள் நடுங்கி உடம்பு நடுங்கி, “என் அப்பனே! என் கடவுளே! நிலம்புலம் விழைந்து பொய்புகலவில்லை, ஆன்ம

இலாபம் எய்த வேண்டும் என்பது பற்றியே அது தோன்றுவதாயிற்று. பொறுத்தருள்க'' என மனத்திஞலேயே விடையிறுத்தனர். அது தெரிந்து கொண்ட பெருமான், ''அந்த இலாபம் என்ஞலாகாதா?'' என்று திருவாய் மலர்ந்தருளி, ''இனி, யான் வருக என்று கூறுங்காறும் பழநிக்கு நீ வரவொண்ணுது; வருவதில்லை என்று கூறு'' என்று கூறலும் அவன் அடியவராகிய ஆசிரியர், ''அப்படியே'' என்று மனத்திஞலேயே) விடை இறுத்தவுடன் இறைவன் அந்தர்த்தானமாய் மறைந்து விட்டனன். ''மானுட வடிவாய்த் தடுத்து நின்ற இறைவன் திருமேனி விவரம் இங்கே கூற என் மனம் இசையவில்லை'' என்று சுவாமிகள் உரைத்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சி நிகழ்ந்த காலம் கரவருடத்து (கி.பி. 1891) ஆடி மாதத்துச் சுக்கிரவாரம் மாலைப் பொழுதாகும். கி.பி. 1991 ஆடி மாதத்துடன் ஒரு நூருண்டு நிறைவு பெறுகின்றது.

ஆன்ம இலாபம் கருதியும் பொய் புகலக் கூடாது என அறுமுகன் கோபித்ததை எண்ணி எண்ணி, அப்பெருமான் தம்மைப் பழநிக்கு வருமாறு அழைப்பான் என்று எதிர் பார்த்துச் சுவாமிகள் ஏங்கிஞர்கள். அந்த அழைப்புச் சுவாமிகளின் இறுதிக் காலம் வரை வரவில்லை. அதை நினைத்து மனம் வருந்தித் திருப்பழநிப் பதிகத்தில் சுவாமிகள் வாய் விட்டு அரற்றி அழுது தேம்பும் காட்சி நம் கண் முன் நிற்கின்றது. அவர்கள் இடும் ஓலம் நம் செவிகளில் கேட்கின்றது. நம் கல் நெஞ்சும் கரைகின்றது. நாமும் தேம்புகிறோம்.

''மெய்யினில் கனிவு கொண்ட விழுத்தவமணி'' ஆகிய சுவாமிகள் பழநிக்கு அழைப்பு வராமையிஞல்,தம் வாஞளில் எத்தனையோ தலங்களைச் சுற்றிச் சுற்றி வந்தும், பழநிப்பதிக்கு மட்டும் செல்லவில்லை. சத்தியம் தவருத சுவாமிகள் அல்லவா?

சுவாமிகள் உளம் வருந்திப் பாடிய திருப்பழநிப்பதிகமும் இப்பழநிக்கு வாராதே; உத்தரவு வருங்காறும் காத்திரு' என்ற செய்தியும் தாம் இயற்றியருளிய குமரகுருதாச சுவாமிகள் பாடல், திருவலங்கற்றிரட்டு முதற்கண்டம், இரண்டாம் கண்டம், ஸ்ரீமத் குமார சுவாமியம் ஆகிய நூல்களில் இடம் பெறச் செய்துள்ளார்கள். இவ்வகைச் சான்றுகளைக் காண்க :

செந்தமிழைச் செவிமடுத்து மகிழும் தேவைத்
 திறல் இடும்பன் உயிர் முருக்கி எழுப்பும் தேவைப்
புந்திநிறைவுடை அருணகிரி சூழ்தேவைப்
 புகர்இகந்த கரவருடம் கடகமாதம்
வந்தஒரு புகர்இரவில் பழநிக் கோவில்
 வரஇஞ்ஞான்று அருளவில்லை அருள்வேம் அந்நாள்
பந்தம்அற வருதிஎனப் பணித்துப் போந்த
 பண்ணவனைப் படர்பவர் எம் பரமர் தாமே.

—(குமரகுருதாச சுவாமிகள் பாடல்-திருவுயர்ந்த ஆறெழுத்தான். 10)

நாயேன் உய்யவென்று நவில்வேன் வருகவென்று
நேயா நீவரலா நிஜமாநம்பு என்று சொன்ன
வாயா எம்பரனே எனைவா என்றே அழையாய்
சியார் தென்பழநித் திருக்கோவில் உள்ளாயே.

(திருவலங்கற்றிரட்டு முதற்கண்டம்- திருப்பழநி. 13)

பொய்சொ லேலினிப் பொய்சொ லேலெனப்
பொன்னி ளுவசைத் தோதி ஏகிய
துய்ய சேயடி,சேர மாதுதி சொல்லுவலே.

(திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டம் ப. 462)

நான் அழைப்பேன் வாஎன அந்நாள் வரலாநீ என்று
போன நினது அருள்வாக்குப்பொய்யாது என்று அனுதினமுன்
கானவினங்களையே நான் கருதியதும் உண்டன்றே.

(ஷ. ப. 526

என்னால் இயலாதா எண்ணுவது போல் செயஎன்று
அந்நாள் உறுதிசொன்ன அள்இலைவேல்—மன்னூர்வின்
எந்நாள் வருமோ இனி. ஷ. பா. 55

எளியேன் நவில் தமிழ்மாலை இயம்போர் பொழுதுஎன்முன்
அளியால் அதுஎன்னால் முடியாதோ எனவினவிக்
களியோடு கரந்தாய் இதுகாறும் கொளல் அறியேன்
வளியூர் ஒருதேரா எனைமறவேல் எனைமறவேல்.

(ஸ்ரீமத் குமாரசுவாமியம்—பெருவேண்டுகோள்.)

இவண் இருந்திடின் மனம் அடங்கிடாது
எனத்துணிந்து நான்இசைத்திருந்த பா
உவகையோடு மேன்மனை அமர்ந்துயான்
உரைத்த போது நீ புறப்படேல் அருக்
கவன மோடு இராய் எனமொழிந்து பின்
கரந்த என்ஒரு கரும்பு கண்ணறை
அவலம் எய்தவோ புரிவை நீபமார்பு
அழகனே அருமழவனே சொலாய்

(ஷ. இடையருது நிற்க விழைதல். 8)

ஆன்மப் பேறுஅடை காரணம் துறவை
அடையு மாகவி படித்திடு ஞான்று அவ்
ஆன்மப் பேறுஎனது அருளில் இன்றே என்று
அறைந்த தண்ணளிக்குக.

(ஷ. திருவருட்செயல் ஞாபகம். 7)

''தமியனை நச்சிச் சுளித்தவா''

(பஞ்சாமிர்தவண்ணம் - நெய்வண்ணம்)

ஓம் குமர குருதாச குருப்யோ நம :

சண்முக கவசம்

இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் கி.பி. 1891க்குச் சரியான கர வருடம் கார்த்திகை மாதம் 8ம் தேதி ஞாயிற்றுக்கிழமையில், திருவிராமேச்சுரத்திலே பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகளால் இயற்றியருளப்பட்டது இந்தச் சண்முக கவசம். அகர முதல் ஔ காரம் முடிய உள்ள உயிர் எழுத்துப் பன்னிரெண்டு, ககரம் முதல் னகரம் முடிய உயிர்மெய் எழுத்துப் பதினெட்டு ஆக முப்பது எழுத்துக்களையும் முறையே முதலில் வைத்து அறு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தமாக முப்பது பாக்களாக அமைந்துள்ளது இக்கவசம்.

சண்முக கவசம் இயற்றிய பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் திருவிராமேச்சுரத்தில் அவதரித்தவர். பாம்பன்பதியில் இல்லறம் நடத்தி அதியிளமையிலேயே பாடும் பணியை ஏற்று, அறுமுகப்பரமனின் பரத்வம் பகரும் சாஸ்திர தோத்திரமாகப் பன்னூல்கள், இயற்றியருளினர். இவை 6666 பாடல்களாகவும் 32 வசன நூல்களாகவும் உள்ளன. குமரி முதல் இமயம் வரை தலயாத்திரை மேற்கொண்டு, துறவுக்கு இலக்கணம் வகுத்து, அதன்படியே ஒழுகி வாழ்ந்து, பிரப்பையில் தவமிருந்து, இறைகாட்சியும் நல்லுபதேசமும் பெற்றவர். பின்னையிலும், சென்னையிலும், பல ஆண்டுகள் வதிந்து திருவான்மியூரில் விதேக முத்தி நிலையில் கோயில் கொண்டுள்ளார். இவர்கள் காலம் கி.பி. 1848 - 1929ஆகும். ஸ்ரீ பாம்பன் சுவாமிகளின் தவ வலிமைக்கும், தெய்வீகப் புலமைக்கும் அவர்கள் இயற்றிய சண்முக கவச பாராயணத்தால் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் அடைந்து வரும் நற்பலன்களே சான்றுகள் எனலாம்.

சண்முக கவசத்தைச் சுவாமிகள் பாடித்தமக்கு உற்ற ஓர் அல்லலினின்று நீங்கினர். அதே போல் அடியவர்களும் சுவாமிகள் வகுத்த நெறியின்படி ஓதுவார்களாயின் உரிய பயனைப் பெறுவர். இது ஒரு மந்திர மறையாகும்.

சண்முக கவசத்தை வாற்சல்ய விசுவாசத்துடன் நாள் ஒன்றுக்கு ஆறு முறை ஓதுபவர்கள் குமரப் பெருமான் அருளால் எத்தகைய துன்பினின்றும் விடுபடுவார்கள். இரவில் வழி நடக்கும் போதும், வனத்தில் செல்லும் போதும், நோயால் வருந்தும் போதும், மற்றும் பிற துன் பத்தில் அகப்பட்ட போதும், நித்திரை செய்யப்போகும் முன்னும், விழித்தெழும்போதும், மரண காலத்திலும் இக் கவசம் வாசிக்கப்படுமாயின் அவரவருக்குற்ற இன்னலி னின்றும் விடுதலை பெறுவர். முடிவில் முத்தியுமடைவர் என்பது திண்ணம்.

கவச பாராயணம் செய்யுங்கால் யாருடனும் பேசுதல் கூடாது. கவசச் செய்யுட்களில் சிலவற்றை மட்டும் படித் தலோ, முன்பின் மாறிப்படித்தலோ கூடாது. கவசத்தில் அடங்கிய எழுத்துக்களும், வார்த்தைகள் அமைந்த முறை யையும், மந்திர சக்தியுடையவையாகையால், மேற் சொன்ன பாடுமுறையைப் பின்பற்றி வருவது நலன்பயக்கும். இலையேல் மந்திரமாறு பாட்டில் விளையும் தீமைகள் ஏற்க வேண்டி வரும்.

கவசத்தை உட்புலத்தே கமனம் செய்யலாம். உரிய பலனையும் பெறலாம். மந்திரமறையாம் இக்கவசத்தின் பெருமையைக் கல்வி கேள்விகளில் சிறந்த பேரறிஞர் பெரு மக்கள் அவ்வக் காலங்களில் விளக்கி உரை நூல்களாக வெளி யிட்டுள்ளனர். கவசத்தின் பெருமையைச் சுவாமிகள் வாயிலாகவே அறிய வேண்டின் சுவாமிகள் இயற்றிய செவி யறிவுறூஉ எனும் நூலில் தமது சீடர்களில் ஒருவரான ஜோதிடர் சின்ன சாமி பிள்ளைக்குத்தாம் வரைந்த கடிதத்தில் கூறியுள்ளதன் மூலம் அறியலாம்.

"செக்கர் வேள் ஒருவனே என் கடவுள் என இவ் வுலக வாழ்வு ஒழித்து வழிபடலிற் சிறந்தவன் எவனே அத்தீவிரதரன் இப்பிறவியிற்றானே வீடுபேறு எய்தி உய்வான்.

இவ்வடியவனுகிய என்னையும், என் சொல்லையும் நம்பாதவன் இத்தீவிர தர கதியை யடைய மாட்டான். நீ மயங்க வேண்டாம். பரிவிற் பெரியாய்! நீ பாரா **யணம் செய்கின்ற மகா மகிமையுடைச் சண்முக கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து அக் கதியிற் சேர்க்குமே.''**

என்னையும் சேய்ப் பரமனையும் நீங்கா நெறியராவர் எல்லாம் என்னுடைய செய்யுள் நூல்களாய ஆறு மண்டலங்களையும் வசன நூல்களையும் படித்துணரக்கடவரால்''.

சண்முக கவசம் பாராயணம் செய்யும் முறை, மற்றும் அப்பாராயணப் பயன் பற்றிச் சுவாமிகள், தாம் இயற்றிய திருப்பா எனும் அலர் சாத்தி அர்ச்சிக்கத்தக்க நூலில் கூறி யுள்ளவற்றையும் கீழே குறிப்பிடுகிறோம் :-

"உண்டியுண்டு பசிப்பிணி ஒழித்துக் கொள்வோன் ஏற்புடை மருந்துண்டு எய்திய நோயினை ஒழித்துக்கொள் ளாது அந்நோயினை இறைவனே நீக்க வேண்டும் என நிற்றலும் தகுதியுடைத்தன்று. எவ்வாற்றானும் தன்னால் நீக்கிக் கொள்ளப்படாத் துன்பினையே தீக்குமாறு இறைவன்பால் விண்ணப்பித்துக் கோடல் வேண்டும்.

அண்டமாய வனியாகி என்பதாதியாய் அகாராதி, னகாரந்தத் தொடக்கமாய் வருஉம் முப்பது செய்யு ளாகிய சண்முக கவசம் நாளொன்றுக்கு ஆறு முறை படிக்கப்படுமாயிற் பரம மந்திரமும் பரம ஔடதமு மாம்.''

வட மொழியில் உள்ள இலக்கியங்களில் காப்பு எனச் சொல்லக் கூடியது கவசம் ஆகும். தமிழ் நாட்டில் விநாயகர் கவசம், சக்தி கவசம், சஷ்டி கவசம், கார்த்திகேயன் கவசம், சண்முக கவசம் போன்ற அநேக கவசங்களும், இன்னும் பிற தெய்வங்களின் பெயரால் அமைந்த கவசங்களும் பாரா யணத்திற்கு உரியவைகளாக வழக்கத்தில் உள்ளன. இராம கவசம் என்ற பெயருடன், இருபத்தி இரண்டு பாடல்களைக் கொண்ட நூல் தூய சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்டு பாலி நாட்டு இலக்கியங்களில் உன்னத இடம் தரப்பட்டுள்ளதை ஒரு சிலரே அறிவர்.

ஸ்ரீ பாம்பன் சுவாமிகளால் இயற்றப்பட்டு, லக்ஷோப லக்ஷம் மக்களால் தமிழ் கூறும் நல்லுல கெங்கணும் ஓதப் பட்டு வரும் சண்முக கவசமும் உலக மக்களால் பல மொழி களில் ஆக்கப்பட்டு அதன் பாராயணத்தின் முழுப்பலனை எய்தும் நாள் அண்மையிலும் அண்மையே.

அறுமுகப்பரமன் கிருபையை வேண்டி நிகழ்த்தும் சண்முக கவச பாராயணத்தின் முழுப்பலனையடைய சண்முகனின் ஆறு திருமுகங்களின் அருள் விளக்கங்களைப் பற்றி ஓரளவாவது உணர்ந்து இந்தக் கவசம் ஓதுதல் நல மாகும். இவைகள் சுவாமிகள்தாம் இயற்றியருளிய முதல் மண்டலத்தில் பகரப்பட்டுள்ளதை உள்ளவாறே கீழே வரைந்துள்ளோம் :-

1. படைப்புத் தொழிலில் நிற்பது ஒரு முகம்.
2. படைக்கப்பட்டவைகளைக் கிருபையால் அழியாது காக்கும் தொழிலில் நிற்பது ஒரு முகம்.
3. காக்கப்பட்ட அனைத்தும் தத்துவ சங்காரப் போரிடை ஒடுக்கும் பெருந்தொழிலில் நிற்பது ஒரு முகம்.

4. மறைப்புத் தொழில் புரி ஆதி சக்தியே இருளாகவும் ஒளியாகவும் நிற்றலின் அதன் கண் நிற்பது ஒரு முகம்.

5. பந்த விடுதலை நிமித்தம் அடியவர்க்கு அனுக்கிர கிக்கும் தொழிலில் நிற்பது ஒரு முகம்.

6. தெய்வயானை, வள்ளி எனும் பிராட்டிகள் முகமுன் அவர்கள் விருப்பு மேம்படு மகிழ்ச்சியுறச் சிவசக்தி யாய் நிற்பது ஒரு முகம்.

சுவாமிகள் பாடிய 6666 பாடல்களை ஆறு மண்டலங் களாகப் பகுத்தவற்றில் நான்காவது மண்டலத்தில் குறித்த சிறுநூற்றிரட்டு எனும் நூலில் சண்முக கவசம் இடம் பெற்றுள்ளது.

சண்முக கவச பாராயணப் பலன் பற்றியறிய வேண்டின் சுவாமிகள் வாழ்ந்த கால நிகழ்ச்சிகளில் சில கூறுதல் முறைமையாகும். அவையாவன :-

கி.பி. 1904ம் ஆண்டு பெங்களூர் வாசியான சண்முகம் பிள்ளை யென்பார் ஒருவர் தமது உத்தியோக முறையில் ஒரு தவறிழைத்தனர் என அரசாங்கம் அவரைப் பற்றியது. அப்போது சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான சென்னை தந்திச் செய்தி உத்தியோகஸ்தராயிருந்த ச. மா. சண்முகம் பிள்ளை யென்பார் அவ்வல்லலை ஒழித்தற்குச் சண்முக கவச பாராயணம் நாள் ஒன்றுக்கு ஆறு முறை செய்யப்படல் வேண்டுமென பெங்களூர் சண்முகம் பிள்ளைக்கு அறிவித்தார். அவரும் அப்படியே செய்து வந்தார். குற்ற விசாரணை காலத்தும் கவச பாராயணம் உட்புலத்தே கமனம் செய்து கொண்டு நின்றார். வழக்கை விசாரித்த அதிகாரியானவர் இக்குற்றச்சாட்டுச் சரியானது அல்ல என்று வழக்கைத் தள்ளி விட்டார். கவச கமனத்தால் அம்முடிவை அறியாது

அவன் நிற்கின்ற பெங்களூர் சண்முகப் பிள்ளையின் கை யினைக் கவச பாராயணம் செய்யச் சொன்ன சென்னை வதிந்த சண்முகம் பிள்ளையானவர் பற்றிக் கொண்டு "விடுதலையாயிற்று வருக" எனக் கொண்டு சென்று நீதி மன்றத்தின் வாயிலில் விட்டு மறைந்தார். மறைதலும், விடுதலையடைந்த பெங்களூர் சண்முகம் பிள்ளை, சென்னை வாசியான சண்முகம் பிள்ளைக்குக் கடிதம் எழுதி "நீர் பெங்களூர் போந்து இக்காரியம் செய்தீரா", என வினவ, தாம் அவ்வாறு செய்ததில்லையே, என்ற விடையைப் பெற் றனர். பின்னர் இரண்டு சண்முகம் பிள்ளைகளும் உண்மை யுணர்ந்து சண்முக கவசத்தின் பெருமையையும் ஸ்ரீ குமார பரமேஸ்வரனின் திருவருட் செயலையும் பலருக்கும் எடுத்தி யம்பி பெருமகிழ் வெய்தினர்.

கி. பி. 1919ம் ஆண்டு பெங்களூர் நீதி மன்றங்களிலே அநியாயமாகக் கொண்டு வரப்பட்டு விசாரணையாய ஒரு திருட்டுக் குற்றத்தினின்றும் அவ்வூர் கண்டிராக்டர் கே. ஆறுமுகம் செட்டியார் என்பாரை விலக்கி யாதொரு துன்பமுமில்லாது காத்தருளியதும் சண்முக கவச பாராயண மாகும்.

கி.பி. 1920ம் ஆண்டு பெங்களூர் அச்சுக் கூட மொன்றில் உத்தியோகஸ்தராயிருந்த தி. கு. சுப்பிரமணியப்பிள்ளை யென்னும் பெயரிய ஒரு நல்லாரை, அவ்வூர் நீதிமன்றில் கொண்டு வரப்பட்ட ஒரு கொலைக் குற்றத்தில் இவர் சம்பந்தப்படவில்லை என விலக்கி அருளியதும் சண்முக கவச பாராயணமேயாகும்.

கி.பி. 1921ம் ஆண்டு பெங்களூர் கிராஸ் கண்டோன் மெண்ட், பாலப்பா கோட்டம் B. தெருவில் 12ம் இலக்க மிட்ட இல்லத்தில் வசித்த த.து. கந்தசாமிப் பிள்ளையின் மகன் ஐந்து வயதுள்ள சரவணபவன் என்பானுக்கு வெப்பு நோய் கண்டு, "இனி இந்நோய் தீராது, இன்றிரவே இவன்

மரணமாய் விடுவான். ஆகலின் மருந்தை நிறுத்தி விட்டோம்'' என வைத்தியரும் கூறி மருந்துங் கொடாது கைவிட்டனர். சிறுவனுடைய தந்தை பெரிதும் வருந்துதலை உணர்ந்த திரு. சுவாமிநாதப் பிள்ளை என்னும் பெயரிய அவ் வீட்டுக் குடையவர் பையனின் தந்தையாகிய கந்தசாமிப் பிள்ளையைச் சண்முக கவச பாராயணம் செய்யச் சொல்ல, அவரும் அவ்வண்ணமே செய்யத் தொடங்கவே நோய் படிப் படியாகக் குறைந்து அச்சிறுவனும் எழுந்திருக்கலானான்.

மேலும் அவனது கால்களிலுற்ற பிடிப்பு அச் சிறுவனை நடக்க வொட்டாது செய்தமையின் அப்பிணியும் நீங்க மீளவும் சண்முக கவச பாராயணம் தொடங்கப்பட்டது. அவ்வாறு பாராயணம் செய்த பதினைந்தாம் நாள் பிணி நீங்கி சிறுவனும் எழுந்து நடை பயின்றனன். இப்பிணி நீக்கத்திற்கு ஔஷதம் ஒன்றும் பிரயோகிக்கப்படவில்லை. சிறுவனைக் காத்தது சண்முக கவச பாராயணமே.

கி.பி. 1923ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் நாள் ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் சென்னையில் தம்பு செட்டித் தெருவில் காலை 10 மணியளவில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது, வடக்கிருந்து தெற்கு நோக்கி விரைந்து வந்த குதிரை வண்டி ஒன்று சுவாமிகளைத் தரையில் தள்ளி ஒரு புறத்துச் சக்கரம் அவர்தம் இடைக்கணைக் காலில் ஏறிச் சென்றமையால் கால் முரிந்தது. இந்நிகழ்ச்சியின் காரணம், பண்டை வினையின் பயன் எனவும், கந்தன் தனது அடியவரை ஆட்கொள்ளும் அருளாடல்களில் இதுவும் ஒன்று எனவும் கொள்க.

கழுது நோக்கினும் அழுமாறு உதிரம் பெருக்கெடுத்து ஓடியது. சம்பவம் நடந்த இடத்தில் கூடிய பலர் சுவாமிகளை, வண்டியில் படுக்க வைத்து எங்குத் தங்களைக் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டனர். சுவாமிகளோ ''யான் எதுவும் கூறேன். உங்கள் நினைப்பின்படி செய்யுங்கள்'' எனக்

கூறிக் குகேசனைச் சிந்தித்த வண்ணமிருந்தனர். அரை நாழிகையில் குதிரை வண்டி அரசுப் பொது மருத்துவமனையை அடைந்தது. அங்குச் சுவாமிகளை மன்றோ வார்டு பதினொன்றும் படுக்கையில் இருக்க வைத்தனர். சுவாமிகளுக்கு எழுபத்தி நான்கு வயதுக்கு மேல் ஆகியதாலும் உப்பு, புளி, காரம் நீக்கிய உணவு உட்கொள்பவர் ஆகையாலும் இவர் கால் குணமடைந்து நடை பயில்வாரோ என்ற ஐயம் மருத்துவர் மனதில் எழுந்தபோதிலும், ஏற்புடைச் சிகிச்சைகளைச்செய்ய ஆரம்பித்தனர். திருவல்லிக்கேணி வாழ் சோதிடர் சின்னசாமிப் பிள்ளையும் அவரது துணைவியாரான பாப்பாத்தி அம்மாளும் நாள்தோறும் உணவும், பாலும், பழவகைகளையும் சுவாமிகளுக்கு அளித்து வந்தனர். சுவாமிகள் விருப்பத்திற்கிணங்க, சுவாமிகளைக் காணவந்த அடியார்கள் அவரவர் இல்லங்களை அடைந்தவுடன் சண்முக கவசத்தை வாற்சல்ய விசுவாசத்துடன் ஓதிவந்தனர். அவ்வாறு பாராயணம் நிகழ்த்திய அடியார்களுள் அல்லிக்கேணி சின்னசாமி சோதிடரானவர் மிகுந்த மன உறுதியோடு இடையறாது சண்முக கவசத்தை ஓதி வந்தார். அவ்வாறு அவர் சண்முக கவசத்தை ஓதும்பொழுது அந்தக் கவசத்தில் "ஏரகத் தேவன் என்தாள் இருமுழங்காலும் காக்க சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க" என்ற வரிகளை ஓதும் சமயத்தில் சுவாமிகளின் கால் எலும்புகள் இரண்டாக முறிவு படாதிருக்க இரண்டு வேல்களின் இலைப்பகுதி பொருந்தப் பூட்டப்பட்டும் அவைகளைத் தாங்கி நிற்பதாக வேறொரு வேல் நிறுத்தப்பட்டிருப்பதையும் சின்னசாமி சோதிடர் கண்டு தொழுவாராயினர். சுவாமிகளின் கால் எலும்பு கூடிக் குணப்படுங்காறும் அவ்வண்ணமே தாம் கண்டு வருதலையும் மகிழ்வோடு சுவாமிகளுக்கு வெளியிட்டுச் சுவாமிகளின் விருப்பப்படியே சண்முக கவச பாராயணம் தொடர்ந்து செய்து மகிழ்பவராயினர். காலின் முறிந்த பகுதி வரை வெட்டி விட எண்ணம் கொண்ட மருத்துவர்கள்

அதிசயிக்கும்படி தெய்வ வைத்தியம் நிகழ்ந்தது. கால் முரிவுண்ட பதிஞேராவது நாள் இரவு செவ்வேளின் வாகன மாய மயில்கள் இரண்டு தோகையை விரித்து வானில் ஆடி வரச் சுவாமிகள் கண்டனர். பிணி நீங்கின பிறகு இல்லம் ஏகலாம் என்ற அசரீரியும் குழந்தை வடிவினஞக குமரன் தனது படுக்கையில் காட்சி நல்கியதையும் மற்ற விபரங் களையும் ஆருவது மண்டலமாகிய ஸ்ரீமத் குமாரசுவாமி யத்தில் அசோக சால வாசம் எனும் 80 பாக்களில் பகர்ந் துள்ளது காண்க. மஹாதேஜோ மண்டல சபையாரால் இந்த சம்பவங்கள் பிரதி வருடம் மயூர வாகன சேவன விழாவாகக் கொண்டாடப்படுகின்றன. முரிந்த கால் கூடிச் சுவாமிகள் நடை கொண்டது சண்முக கவச பாராயண மகிமை யிலேயேயாம்.

கி.பி. 1924ம் ஆண்டு, மதுரைக் கமலைத் தோப்புத் தெருவில் வசித்த விசுவ நாத ஐயர் திருச்செந்தூர் குமார பக்த சிரோமணியாகிய ஈ. அனந்த சுப்பைய தீக்ஷதரின் அறிவுரைப்படிச் சண்முக கவச பாராயணம் செய்து தம் முடைய கைகளிலுற்ற கருங்குஷ்டமும் மூல பௌத்திரமும் ஒரே வாரத்தில் நீங்கப்பெற்று அதிசயித்து மகிழ்வெய்தினர்.

கி.பி. 1925ம் ஆண்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டை அருணுசல நாயக்கன் தெரு 15/4 எண் இல்லத்தில் வசித்த தாமோதரம் பிள்ளையவர்களின் மனைவி இரத்தினம்மாள் கழுத்தில் உண்டாயிருந்த கண்டமாலை எத்திற வைத்தியத் திஞலும் தீரவில்லை. அந்த அம்மாள் நாள்தோறும் ஆறு முறை சண்முக கவச பாராயணம் செய்து வந்தார்கள். ஒரு மண்டலம் அவ்வாறு சண்முக கவச பாராயணம் நிகழ்ந்தது. இரத்தினம்மாளும் பிணியினின்றும் நீங்கிச் சுகம் எய்தினர்.

கி.பி. 1925ம் ஆண்டு பெங்களூர் கிராஸ் கண்டோன் மெண்ட், பாலப்பா கார்டன் B தெருவில் 82ம் எண்ணுள்ள

வீட்டிற்கு உடையவராய நா. பொன்னுசாமிப் பிள்ளை ஐந்தாண்டுகளாகக் குன்ம வியாதியால் மிகவும் துன்பப்பட்டார். எத்திற மருந்துகளானும் தீராத அந்நோயின் கொடுமையால் ஒருநாள் அப்பிணியாளர் மூர்ச்சையாய் வீழ்ந்தவுடன் அவ்வீட்டிலுள்ளவரெல்லாம் கண்ணீர் சொரிந்து அழ ஆரம்பித்தனர். அப்போது அங்கு வந்த கந்த பக்தி மிக்க த.து. கந்தசாமிப் பிள்ளையென்பார், அழுகையை மேற் கொண்டவர்களுக்குத் தேறுதல் கூறி சண்முக கவச பாராயணம் செய்யப் பணித்தார். சண்முக கவச பாராயணம் தொடங்கப்பட்டது. அவ்வமயம் அங்கு ஒருவர் தோன்றி மூர்ச்சையாகிக் கிடப்பவரை தேக நரம்புகளைத் தமது கையால் தேய்த்து விட்டு மருந்து ஒன்றும் கொடுக்காமலே மறைந்து சென்றதைக் கண்ணுற்ற கந்தசாமிப் பிள்ளை சண்முக கவச பாராயணம் பூர்த்தியானவுடன் தமது இருப்பிடம் அடைந்து மறுநாள் போந்து பொன்னுசாமிப் பிள்ளையைக் கண்டபோது அவர் தம் படுக்கையை விட்டு எழுந்திருத்தலை உணர்ந்து உவகை மேலிட, மேலும் மூன்று நாட்களுக்குச் சண்முக கவச பாராயணம் விதிப்படி தாமே நிகழ்த்தி பொன்னுசாமிப் பிள்ளையை நோக்கி, இனி நீரே கவசத்தைப் பாராயணம் செய்து கொள்ளலாம் எனக் கூறித் தமது இருக்கைக்கு ஏகினர். சண்முக கவ்ச பாராயணம் வகுத்த முறைப்படி பிணியாளரான பொன்னுசாமிப்பிள்ளை நிகழ்த்தி வரும் காலமான கி. பி. 1925 செப்டம்பர் 3ம் நாள் இரவு 2 மணியளவில் யாதொரு உபாதையுமின்றிச் சேதிக்கப்பட்டதும், அவரது வயிற்றினுள் இருந்ததுமான கட்டியானது துண்டு துண்டாய் ஆட்டு ஈரல் அளவினதாய் அவரின் வாய் வழி வந்து வீழ்தலோடு ஒரு பாத்திரம் நிறைய இரத்தமும் வெளிப் படுவதாயிற்று. அது முதலாக அவரது வயிற்றிலிருந்த வாதையும் நீங்கிற்று. பின்னும் அன்னர் சண்முக கவச பாராயணத்தை நாடோறும் நிகழ்த்தி குமாரன் கிருபைக் குரியவரானர்.

கி.பி. 1925ல் பெங்களூர் தண்டு நியூகொரச்ச பாளையம் A வீதி 25ம் எண்ணுள்ள இல்லத்து வாசியான வடிவேல் முதலியார் என்பார் சிறந்த அவ்வூர் ஆங்கில வைத்தியரிடம் கம்பவுண்டர் வேலை பார்த்து வந்தார். அன்னார் தமது குமாரனாகிய நடராஜன் என்பானுக்குற்ற வெப்பு நோய்க்காக 48 நாட்களாக ஆங்கில வைத்தியம் செய்தார். நோயின் கடுமையால் நடராஜனின் பற்கள் கிட்டியிருந்தமையால் அவனது மூக்கின் வழியே ரப்பர் குழாயைச் செலுத்தி அதன் மூலமாகப் பாலைச் செலுத்திப் பார்த்ததினும் அவனுக்கு மரணக் குறிகள் ஏற்பட்டு விட்டன. உடனே பையனின் தந்தை பதறினர். ஆயினும் இனி இது செய்வேன் எனச் சண்முக கவச பாராயணத்தையே காலையு மாலையுமாகச் செய்யத் தொடங்கினர். நாளடைவில் பையன் தனது வாயைத் திறந்து பாலுட் கொண்டு பூரண சுகமடைந்தனன். என்னே கவச பாராயண மகிமை!

கி.பி. 1926ம் ஆண்டுக்குச் சரியான குரோதன வருடம் புரட்டாசி மாதம் 10ம் நாள் மாலையில் தென்னுற்காடு, சிதம்பரம், வண்டிக்காரத் தெருவில் வசித்த 40 வயதுடைய செல்வத்தம்மாள் அவர்களின் வலது கணைக்காலில் ஒரு கொடிய விஷப்பாம்பு கடித்து விட்டது. அதன் விளைவாக அந்த அம்மையாருக்கு நெஞ்சு அடைப்பும் மேல் மூச்சும் வாங்க ஏற்பட்டவுடன் உடனிருந்தவர்களில் ஒருவர் உருக்கமாகச் சண்முக கவசம் பாராயணம் நிகழ்த்தினர். அவ்வளவிலே விஷம் இறங்கி அந்த அம்மையாரும் சுகமுற்றனர்.

மேற்கண்டயாவும் சுவாமிகள் காலத்திலேயே நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளாகும். இதுபோல் எண்ணற்ற சம்பவங்கள் நிகழ்ந்ததாக அன்பர்கள் ஆங்காங்கே கூறிவருகின்றனர். அவர்கள் அவ்வாறு பெற்ற சண்முக கவச பாராயணப் பலன்களை விபரமாக வரைந்து மஹா தேஜோ மண்டல சபையின் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்களுக்கு உடனே அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கொள்ளப்படு

கிறார்கள். அவ்வாறு பெறப்படும் விபரங்களைத் தொகுத்து, அடுத்தபடியாக வெளியிடும் நூல்களில் அவைகளையும் சேர்த்து வெளியிட வாய்ப்பாகும். அண்மையில் நிகழ்ந்த அனுபவங்களில் ஒன்றிரண்டு இங்கே குறிப்பது பொருத்த மாகும்.

கி.பி. 1964ல் மஹா தேஜோ மண்டல சபைத் தலைவர் மதுரை மாவட்ட வணிக வரி அலுவலனுகப் பணி புரிந்த காலம். அவ்வாண்டு டிசம்பர் மாதம் 23ம் நாள் அதாவது கடல் கொந்தளிப்பு காரணமாக தனுஷ்கோடி கடலில் மூழ்கிய அதுவாகும். அன்றைய தினம் மதுரையை அடுத்த மேலூருக்கு முகாம் சென்றிருந்தார். நண்பகல் வரை அலுவல்கள் நிறைவு செய்யப்படுகின்றன. கடும் மழை புயல் சூறுவளியாக வீச ஆரம்பித்தது. இனியும் இங்கு இருக்க ஒண்ணுது என எண்ணிச் சிப்பந்திகளுடன் காரில் புறப்பட்டு மதுரை நோக்கி வருகிருர். நான்கு கிலோ மீட்டர் வந்ததும் ஒரு பெரிய மரம் பாதையில் குறுக்கே வீழ்ந்தது. காரைத் திருப்பி மறுபடியும் மேலூருக்குச் செல்வோம் என எண்ணும் போது அந்தப் பக்கம் பாதையில் ஒரு பிரம்மாண்டமான மரம் வீழ்ந்தது. செய்வதறியாது திகைத்த வேளையில் ஆங்கு குழுமியவர்கள் சேர்ந்து யானை மலை ஒத்தக்கடை வரை நடந்து செல்ல ஆரம்பித்தனர். கடும் புயல், மழை, காற்று வேகம் அதிகரித்து வருகிறது. கைப் பொருள். மற்றும் அணிந்திருந்த உடை அனைத்தும் காற்றில் பறக்கிறது. உடன் வந்தவர்களில் ஒருவர் இராணுவத்தினர். யாவரும் அழத் தொடங்கி விட்டனர். புயலின் சீற்றத்தைத் தாங்கிக் கொண்டு, நடந்து வருகிருர்கள். பாதை ஓரமாக ஒரு பாழ் மண்டபத்தில் இருவர் கொடிய ஆயுதங்களுடன் இவர்களை வரவேற்கின்றதைக் கண்டு தலைவர், சுவாமிகளைச் சிந்தித்து சண்முக கவசம் ஓத ஆரம்பித்த அளவில் பின்புறமாக ஒரு குரல் "நில்லுங்கள் நானும் வருகிறேன்" எனக் கேட்டது. ஒரு காவல் துறை

அதிகாரி (கான்ஸ்டேபிள்) வந்து இவர்களுடன் நடந்து வர ஆரம்பித்தார். பாழ்மண்டபத்தில் இருந்து கொண்டு இவர்களை வரவேற்ற கள்ளர்கள் அவரைக் கண்டு மறைந் தனர். கான்ஸ்டபிள் உடன் வர புயல் சீற்றத்திற்கு ஈடு கொடுத்துக் கொண்டு நடந்து வருகின்றனர். கவச பாரா யணம் தொடர்கிறது ஒத்தக் கடையை நெருங்கி வரு கிறார்கள். கவச பாராயணம் நிறைவு பெறுகிறது. உடன் வந்த கான்ஸ்டேபிள் எப்படியோ மறைந்து விட்டார். ஊர் இன்னும் 200 கெஜ தூரத்திலுள்ளது. உடன் வந்த காவல் துறையினரைக் காணவில்லை.

அப்போதுதான் கவனத்திற்கு வருகிறது. மழையில் புயல் காற்றிலும் முழுக்க நனைந்து வர உடன் வந்தவரின் காக்கி உடை மட்டும் நனையாமல் அவர் வந்த காட்சியும் மற்றவர் அனைவரும் நனைந்து அரை நிர்வாணர்களாக வருகிற நிலையையும் உணர்ந்ததும் அனைவரும் பீதியடைந் தனர். அப்படியே நின்று உடன் வந்தவர்களிடம் விபரம் கூறியதும் யாவரும் அதிசயித்து, அழுதே விட்டனர். கேட்ட தற்குத் தன் பெயர் ஆறுமுகம் எனக் கூறிய கான்ஸ்டேபிள் உருவில் ஒருவரை வழித்துணையாக அனுப்பி கள்வரிட மிருந்து காப்பாற்றிக் காற்று மழையில் உடனுக வந்து தைரியம் கொடுத்து உன் வாழ்க்கைப் பயணத்தையும் இவ் வாறே எமது கருணையால் கடந்து எம் திருவடிக்கு வா எனப் பணித்துப் போந்த பண்ணவனின் கிருபையையும் சண்முக கவச மகிமையையும் இந்நில உலகு நன்கு புரிந்து செயல் பட்டு பலன்கள் துய்க்க விழைகிறோம்.

கி.பி. 1970 உத்தியோகத்தில் மேலதிகாரியாய் இருந்த ஒருவர் தமது மனைவியுடன் சென்னையிலிருந்து சீர்காழியில் உள்ள தம் இல்லம் செல்ல ஒருநாள் தம் காரில் சென்று கொண்டிருக்கிறார். செங்கல்பட்டு கடந்து செல்கிறார். இரு புறமும் வீடுகள் இல்லாத காட்டுப் பகுதியில் கார் சென்று கொண்டிருந்தது. திடீர் எனக் கோளாறு ஏற்பட்டு வண்டி

நின்று விடுகிறது. சாரதியாய் வந்தவர் முயன்றும் சரி செய்ய இயலவில்லை. மனைவியுடன் காரில் அமர்ந்திருந்த அதிகாரி தன் மனைவியிடம் தமது விருப்பை உணர்த்துகிறார். ''நாம் சண்முக கவசம் பாராயணம் செய்வோமா?'' கவச பாராயணம் ஆரம்பமாகிறது. அக்கணமே அருகில் உள்ள முட் புதர் பக்கலில் இருந்து ஒரு மொட்டையன் காண்பதற்குச் சற்று அச்சம் தருமளவு உடல்வாகு கொண்ட ஒருவன் வந்து கார் ஓட்டியை நகர்ந்து கொள்ளச் சொல்லி விட்டு எஞ்சின் பாகங்களில் சிலவற்றைச் சீர்செய்வதுபோல் செய்து ''சரி செய்து விட்டேன் வண்டியை எடுங்கள்'' என ஆணை பிறப்பித்தான். டிரைவரும் அவ்வாறே முயலவும் வண்டி புறப்பட்டது. கவச பாராயணம் செய்யும் அதிகாரி சைகையால் வந்தவரைக் கூப்பிட்டுப் பணம் கொடுக்க முயன்ற போது, ''உங்கள் வேலையைத் தொடருங்கள்'' எனக் கூறிச் சென்று மறைந்தனர். அதிசயமும் ஆச்சரியமும் அடைந்த அதிகாரி தம் சோழநாட்டுப் பயணத்தை நிறைவு செய்து கொண்டு சென்னைக்குத் திரும்பி வந்து சண்முக கவச பாராயண மகிமையையும் சுவாமிகளின் கருணையையும் வெளிப்படுத்தியபோது மகிழ்ந்தோர் பலர்.

கி.பி. 1927 மதுரையில், வணிக வரித் துறையில் பணி புரிந்த விநாயகம் என்பார், தனது சக ஊழியர்கள் காழ்ப் புணர்ச்சியின் காரணமாக அன்னார் இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகளால் பற்றப்பட்டார். அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு தற்காலிகப் பதவி நீக்கமும் செய்யப்பட்டது. தொடர்ந்த வழக்கில் கீழ்க் கோர்ட்டில் விநாயகம் என்பாருக்கு நீதி கிடைக்கவில்லை. பாம்பன் அடியார் ஒருவர் அவரைச் சண்முக கவச பாராயணம் செய்து வரும்படி கூறினார். மனந் தளர விடாமல், கவச பாராயணம் உரிய முறையில் ஓதிவரவும், தனக்கு இழைத்த அநீதியை எதிர்த்துச் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யும்படியும்

யோசனை கூறப்பட்டது. அன்னாரும் அவ்வாறே செய்ய உயர்நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நேரத்திலும் விநயகம் என்பார் உள் உருக்கத் துடன் தொடர்ந்து கவச பாராயணம் செய்து நின்றார். வழக்கை விசாரித்த நீதிபதியவர்களுள் சண்முக நாதனின் கிருபை செயல்பட்டது போலும்; கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பு சரியல்ல, தொடர்ந்த குற்றம் ருசுவாகவில்லை. விநாயகத்தை பழையபடியும் உத்யோகத்தில் சேர்க்க ஆணை பிறப்பித்தார். அவரே கனம் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆவர். சண்முக கவச பாராயணம் ஒரு மந்திர மறை என்பதை ஓர்க. இத்தகைய மகிமை வாய்ந்த சண்முக கவசத்தைச் சுவாமிகள் பாடியுள்ள முறைப்படி பாடி முழுப் பலனையும் அன்பர்கள் நுகர வேண்டி அவர் ஜீவதசையில் அச்சிடப்பட்டு வெளிவந்த மூலநூலிலிருந்து அப்படியே பதிப்பித்துள்ளோம்.

எந்தை அருணகிரிநாதர் கூறியது சிந்தையில் ஏற்றுக. "அழித்துப் பிறக்க வொட்டா அயில் வேலன் கவியை எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்" என்று கூறியதைத் தான் ஞாபகப் படுத்துகிறோம். மேலும் ஏற்கனவே கூறியுள் ளோம். சண்முக கவசம் நமக்கு மருந்தும் மந்திரமுமாம். பிழையின்றி ஓதி உரிய பலனைப் பெற்றுய்க.

தொடர்வது சண்முக கவசம் எனும் ஐயைந் தோடைந்து ஆகிய முப்பது அறுசீர் ஆசிரியப் பாக்களாகும். பாடுக. பலன் பெறுக.



உ

ஓம் குமார குருப்யோ நம :

சண்முக கவசம்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சண்முக கவசமூலமும் அதன் சொற்பிரித்து எழுதிய வடிவமும் பொழிப்புரையும்

அண்டமா யவனி யாகி யறியொணுப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வமாகி
எண்டிசை போற்ற நின்ற வென்னரு ளீச னுன
திண்டிறற் சரவ ணத்தான் றினமுமென் சிரசைக் காக்க. 1

அண்டமாய் அவனி ஆகி அறியொணுப் பொருளது ஆகித்
தொண்டர்கள் குருவும் ஆகித் துகள்அறு தெய்வம்ஆகி
எண்திசை போற்றநின்ற என்அருள் ஈசன்ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என்சிரசைக் காக்க.

விண்முதலிய அண்டங்களாகிப் பூமியாகி, யாரும் அறிதற்கரிய பொருளுமாகி, தொண்டர்களுக்குக் குருவுமாகி, குற்றமறுக்கும் தெய்வமாகி, எட்டுத் திசைகளிலுள்ளோரும் துதிக்க நின்ற என் அருள் ஈசனுகிய அளவிலா வன்மையையும், வெற்றியை யும் உடைய சரவணபவனுர் நாளும் எனது சிரசைக் காப்பாராக.

ஆதியாங் கயிலைச் செல்வ னணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் றுனிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் றுரிசிலா விழியைக் காக்க
நாதனுங் கார்த்தி கேய ஞசியை நயந்து காக்க. 2

ஆதிஆம் கயிலேச்செல்வன் அணிநெற்றி தன்னேக் காக்க
தாதுஅவிழ் கடப்பந்தாரான் தான்இரு நுதலேக் காக்க
சோதிஆம் தணிகைஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதன்ஆம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க.

எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாகிய கயிலேச் செல்வன் திருநீறு அணிதற்குரிய நெற்றியினேக் காப்பாராக. தேன்சிந்தும் கடப்ப மாலேயை அணிந்தவர் இரண்டு புருவங்களேயும் காப்பாராக. சோதி வடிவாகிய தணிகை ஈசன் குற்றமில்லாத கண்களேக் காப்பாராக. எம் இறைவனுகிய கார்த்தி கேயன் மூக்கினே விரும்பிக் காப்பாராக.

இருசெவி களேயுஞ் செவ்வே ளியல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானேத் துண்டனுர் துணேவன் காக்க
திருவுடன் பிடரி தன்னேச் சிவசுப்ர மணியன் காக்க. 3

இருசெவிகளேயும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதும் நற்குமரன் காக்க
துரிசுஅறு கதுப்பை யானேத் துண்டனுர் துணேவன் காக்க
திருவுடன் பிடரிதன்னேச் சிவசுப்ரமணியன் காக்க.

இரண்டு காதுகளேயும் செவ்வேள் இயல்பாகக் காப்பாராக. வாயை முருகவேள் காப்பாராக. நாவையும் பற்கள் முழுமையும் நல்ல குமரன் காப்பாராக. குற்ற மற்ற கன்னங்களே யானே முக முடைய விநாயகரின் சகோதரன் காக்க. திரு வுடனே பிடரியைச் சிவ சுப்ரமணியன் காப்பாராக.

ஈசனாம் வாகு லேய னெனதுகந் தரத்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவுந் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீரா றாயுதன் காக்க வென்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழிற்குறிஞ் சிக்கோன் காக்க. 4

ஈசன் ஆம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசு இலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க என்றன்
ஏசுஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன்காக்க.

ஈசனாகிய கார்த்திகேயன் என்னுடைய கழுத்தைக் காப்பாராக. ஒளி பொருந்திய தோள்களையும், விலாவையும் இலக்குமியின் மருகனாகிய குமரன் காவல் புரிவாராக. குற்றமில்லாத மார்பை, பன்னிரெண்டு படைக்கலங்களையுடையவர் காக்க. பழித்தல் இல்லாத என் முழங்கைகளை அழகிய குறிஞ்சி நிலக் கோமான் காப்பாராக.

உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை யயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க. 5

உறுதியாய் முன்கைதன்னை உமை இளமதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத்தலத்தை மாமுருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன் காக்க பின்முதுகைச் சேய் காக்க.

முன்கைகளை உமாதேவியின் இளைய குமாரன் உறுதியாய்க் காக்க. எனது உள்ளங்கைகளை அஞ்சாமை மிகப் பொருந்தும்படி மகா வல்லமையுடைய முருகன் காப்பானாக. பின் கைகளை வேலவன்

காப்பானாக. பணிகளை நிறைவேற்றுதற்குக் கருவியாயுள்ள கை விரல்கள் பத்தும் விளங்குகின்ற திருமால் மருகன் காவல் புரிவாராக. பின் முதுகைக் குழந்தை வடிவனான குமாரக் கடவுள் காப்பாராக.

ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேச னுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க வறுமுகன் குதத்தைக் காக்க. 6

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க வம்புத்
தோள் நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக்காக்க குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக்காக்க.

உணவு நிறைதற்கிடமாகிய வயிற்றை மயில் வாகனன் காக்கக் கடவன். ஞான மணம் கமழும் பூரித்து உயர்ந்த தோள்களையுடைய தேவர்தலைவன் உந்திச் சுழியினைக் காவல் புரிவானாக. நாபிக்கும் குறிக்கும் இடையிலுள்ள பகுதியை (குய்யநாண்) சிவசக்தி குமரன் காப்பானாக. பீஜங்களை இணைக்கும் தண்டினை (பீஜ ஆணி) கந்தன் காப்பானாக. எருவாயை (குதம்) அறுமுகப் பெருமான் காப்பானாக.

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்சக னமொரி ரண்டு மரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங் கேயன் விளரடித் தொடையைக்காக்க
செஞ்சர ணேச வாசான் றிமிருமுன் றொடையைக் காக்க. 7

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க

விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித்தொடையைக் காக்க
செம்சரண் நேச ஆசான் திமிரும் முன் தொடையைக் காக்க.

வன்மை குறையாமல் எனது இடுப்பை வேலுக் கதிபதி காப்பாராக. அழகிய சகனப் பிரதேசத்தை அரன் மகன் காவல் புரிக. எவற்றிற்கும் மேலாய பொருளாயுள்ள கங்கா நதியின் மைந்தனுன குமர வேள் கொழுமை பொருந்திய அடித் தொடையைக் காப்பாராக. சிவந்த திருவடிகளையுடைய ஆன்ம நேயமிக்க குருசுவாமி வன்மை மிகுந்த முன் தொடையைக் காவல் புரிவாராக.

ஏரகத் தேவ னென்று ளிருமுழங் காலுங் காக்க
சீருடைக் கணைக்கா றன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கா றன்னைத் திருச்சோலை மலையன் காக்க. 8

ஏரகத்தேவன் என்தாள் இருமுழங்காலும் காக்க
சீர் உடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேர் உடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க.

சுவாமி மலையில் எழுந்தருளியுள்ள தெய்வபிரான் என் இரண்டு முழங் கால்களையும் காப்பாராக. சிறப்புடைய கணைக் கால்களைச் சந்தன சயிலமாகிய திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள தெய்வம் காவல் புரியட்டும். நேர்மையுடைய புறங்கால்கள் இரண்டையும் திருப்பரங்குன்றத்து அமரும் செல்வன் காப்பாராக. சீர்பொருந்திய குதிக்கால்களைப் பழமுதிர்சோலை யமர் பகவன் காப்பாராக.

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் றினமுமென் னெஞ்சைக் காக்க. 9

ஐஉறு மலையன் பாதத்து அமர் பத்து விரலுங்காக்க
பைஉறு பழநிநாத பரன் அகங்காலைக் காக்க
மெய் உடல் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வநாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க.

அழகு மிக்க பல குன்றிலும் அமர்ந்த பெருமானு னவன், பாதங்களிலுள்ள பத்து விரல்களையும் காப்பாராக. அருளாகிய பசுமை நிறைந்த பழநி நாதனுகிய பரமன், உள்ளங்கால்களைக் காக்கக் கடவர். மெய்யுடல் முழுதும் மூல காரணனுகிய மலங்களுக்கு அப்பாற்பட்ட அறுமுகப்பிரான் காவல் புரிவாராக. நாளும் எனது நெஞ்சை தெய்வங்களுக்கெல்லாம் தலைவனுகிய விசாகப் பெருமான் காப்பாற்றுவாராக.

ஒலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப் ரேதம்
பலிகொளி ராக்க தப்பேய் பலகணத் தெவையா னுலுங்
கிலிகொள வெனைவேல் காக்க கெடுபரர் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடா தயில்வேல் காக்க. 10

ஒலியெழ உரத்த சத்தத்தொடு வரு பூதம்பிரேதம்
பலிகொள் இராக்கதப் பேய் பலகணத்து எவையானுலும்
கிலிகொள எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூனியம்
வலியுள மந்திர தந்திரம் வருத்திடாது அயில்வேல் காக்க.

பேரொலி எழும்பும் படியாக உரத்த சத்தத்தொடு வரும் பூதம், அகால மரணத்திற்கு ஆளாகிப் பேய்

நிலையுற்றவர்கள், பலி கொள்ளும் தன்மையுடைய இராக்கதப்பேய், முதலிய தீய கணங்கள் எவையாலும் எனக்குத் துன்பம் உண்டாக்காமல் அவை அஞ்சும்படி செய்து என்னை ஞான சக்தி வேல் காக்கக் கடவது. கேடு சூழும் பகைவர் செய்யும் சூன்யம், மற்றும் வலிய மந்திர தந்திரம் முதலியவைகள் என்னை வருத்திடாமல் கூரிய வேல் காவல் புரிக.

ஓங்கிய சீற்ற மேகொண் டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகந் தடிபர சீட்டி யாதி
பாங்குடை யாயு தங்கள் பகைவரென் மேலே யோச்சின்
தீங்குசெய் யாம லென்னைத் திருக்கைவேல் காக்க காக்க. *11*

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணி வில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி ஆதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கை வேல் காக்க காக்க.

மிகுந்த சினத்தையே கொண்டு வாள்வில் வேல் சூலங்கள், தாங்கிய தண்டு, சக்கரம், தடி, மழு, ஈட்டி, முதலிய கொலைத் தன்மையுடைய படைகளைப் பகைவர்கள் என் மேல் ஏவினுல் அவைகள் எனக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படுத்தாமல் முருகப் பெருமானின் திருக்கரத்திலுள்ள வேல் காக்கப் பதாக.

ஔவிய முளரூ னுண்போ ரசடர்பே யரக்கர் புல்லர்
தெவ்வர்க ளெவரா னுலுந் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
கவ்வுடைச் சூர சண்டன் கையயில் காக்க காக்க. *12*

ஔவியம் உளர்ஊன் உன்போர் அசடர் பேய் அரக்கர்புல்லர்
தெவ்வர்கள் எவராளு லும் திடமுடன் எனை மற்கட்டத்
தவ்வியே வருவாராயின் சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூரசண்டன் கை அயில் காக்க காக்க.

பொருமையுடையவர்கள், புலால் உண்பவர்கள் கீழ் மக்கள், பேய், இராக்கதர், அற்பர்கள் பகைவர்கள், முதலானோர் எவர்களேனும், மற்போரில் என்னை இறுகப் பிடிக்கத் தாவி வருவாராயின் சகல உலகங்களையும் காக்கும் பெருமையுடைய அசுர குல காலனாகிய கந்தவேள் திருக்கையிலுள்ள கூரிய வேல் காக்க காக்க.

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோ ணாய்கு ரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனு லேனு நானிடர்ப் பட்டி டாமற்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க 13

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலி மாயானை
கொடிய கோள்நாய் குரங்கு கோலம் மார்ச்சாலம்சம்பு
நடையுடை எதனுலேனும் நான் இடர்ப்பட்டிடாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவிமுளைவேல் காக்க.

கொடிய விஷத்தையுடைய பாம்பு, சிங்கம், கரடி, நாய், புலி, குதிரை, யானை, வலிய ஓநாய், குரங்கு, காட்டுப் பன்றி, பூனை, நரி, முதலிய நடந்து வரும் மிருகங்கள் எதனுலும் நான் துன்பப்படாமல் விரைவில் வந்து வடிவேல் காப்பதாக. கங்கையில் தோன்றிய காங்கேயனின் வேல் காப்பதாக.

ஙகரமே போற்ற ஙீ இ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதே ணண்டுக் காலி செய்யனே ருலப் பல்லி
நகமுடை யோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலா தைவேல் காக்க. 14

ஙகரமேபோல் ; ழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரி தேள் நண்டுக்காலி செய்யன் ஏறு ஆலப்பல்லி
நகம் உடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின்பூச்சி
உகம் மிசை இவையால் எற்கு ஓர் ஊறுஇலாது ஐவேல்
காக்க.

"ங" கரம் போல என்னையும் என் இனத்தையும் தழுவிக் கொண்டு ஞானமருளும் வேல் காக்கக் கடவதாக. வலிய பறவை இனம், எலி, தேள், நண்டுத் தெருக்கால், வலிமை மிக்க செய்யான், விஷப்பல்லி, நகத்தையுடைய ஓணான், பூரான், சீத மண்டலம், சிலந்தி இவைகளால் இவ்வுலகில் எனக்கு எவ்வித கெடுதியும் ஏற்படாமல் அற்புத கிருபையுடைய வேல் காப்பதாக.

சலத்திலுய் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலுஞ் சலத்தி லுந்தா னெடுந்துயர் தரற்கே யுள்ள
குலத்தினு ஞன்வ ருத்தங் கொண்டிடா தவ்வவ் வேளை
பலத்துட னிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15

சலத்தில் உய் வன்மீன் ஏறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினுல் நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க.

நீரில் வாழும் முதலை, எழுச்சியுடைய வளைதடி போன்ற வாலுள்ள திருக்கை மீன், முதலியவற்றாலும், நிலத்திலும், நீரிலும், பெரும் துன்பம் தருவதற்கென்றே உள்ள உயிர் இனங்களாலும் நான் வருத்தப்படாமல், அவ்வக் கா்லங்களில் பலத்துடன் நெருப்பிலுதித்த முருகனுடைய கூரிய வேல் உடனிருந்து காப்பதாக.

ஞமலியம் பரியன் கைவே னவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்க டந்த சூலேயாக் கிராண ரோகம்
திமிர் கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமையணு காம லேபன் னிருபுயன் சயவேல் காக்க. 16

ஞமலி அம்பரியன் கைவேல் நவக்கிரகக் கோள் காக்க
சும விழி நோய்கள் தந்த சூலே ஆக்கிராணம்ரோகம்
திமிர்கழல்வாதம் சோகை சிரம் அடிகர்ணரோகம்
எமை அணுகாமலே பன்னிரு புயன் சயவேல்காக்க.

அழகிய மயிலே வாகனமாகவுடைய முருகன் கையிலேந்திய வேலானது, நவக்கிரகங்களால் எனக்கு உண்டாகும் கேடுகளினின்றும் காப்பதாக. மலர் போன்ற கண்களுக்கு வரும் நோய்கள் பல்வலி மூக்கு வலி, திமிர் வாதம், கழல் வாதம். சோகை, தலேயின் அடிப்பாகத்திலுள்ள காது வலி, போன்ற பிணிகள் என்னே நெருங்கி வராமல் பன்னிரு தோள் களேயுடைய வெற்றி வேல் காப்பதாக.

டமருகத் தடிபோ னேக்குந் தலேயிடி கண்ட மாலே
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணு திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேக மெல்லாம்
எமையடை யாம லேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க. 17

டமருகத்து அடிபோல் நைக்கும் தலேயிடி கண்ட மாலே
குமுறு விப்புருதி குன்மம் குடல்வலி ஈழை காசம்
நிமிரொணுது இருத்தும் வெட்டை நீர்ப்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிநதவன் கைவேல் காக்க

உடுக்கையின் அடிபோல் துன்பம் செய்யும் தலேயிடி, கண்ட மாலே, உள்வீங்கி வருத்தும் சிலந்திப் புண், குன்மம், குடல் வலி, கோழை, காசம், நிமிர முடியாதபடி குனிய வைக்கும் வெட்டை நீர், மற்றும்

மேகம், முதலிய வெல்லாம் என்னை யடையாமல் கிரவுஞ்ச மலையைத் தடிந்த குமரவேளின் திருக் கரத்திலமர்ந்த வேல் காப்பதாக.

இணக்கமில் லாத பித்த வெரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்‌கும் குஷ்ட மூலவெண் முளை தீ மந்தஞ்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்
பிணிக்குலமெனையா ளாமற் பெருஞ்சத்தி வடிவேல்காக்க. 18

இணக்கம் இல்லாத பித்த எரிவு மாசுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண்முளை தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னிசாலம்என்று அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சத்தி வடிவேல் காக்க.

தன் அளவில் பொருந்தாத பித்த எரிவு, பெருஞ் சுரங்கள், கை கால்களை உள் வளைக்கும்படி குறைக் கும் குஷ்டம், வெண் மூல முளை, பசிக் குறைவு. விரைவில் கொல்லும் சன்னி வகைகள் என்று சொல்லப்படும் இவ்வித நோய் வகைகள் எவையும் என்னைத் தம் வயப்படுத்தாமல் பெரிய சக்தி வடிவேல் காப்பதாக.

தவனமா ரோகம் வாதஞ் சயித்திய மரோச கம்மெய்
சுவறவே செய்யு மூலச் சூடிளைப் புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோ யண்டவா தங்கள் சூலை 19
எவையுமென் னிடத்தெய்தாம லெம்பிரான்றிணி வேல்காக்க

தவனம் மாரோகம் வாதம் சயித்தியம் அரோசகம் மெய்
சுவறவே செய்யும் மூலச்சூடு இளைப்பு உடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவாதங்கள் சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க.

நாவரட்சி யுண்டாக்கும் பெருநோய், வாதம், சீதளம், உணவில் வெறுப்பு, உடம்பை வற்றுமாறு செய்யும் மூலச் சூடு, இளைப்பு, வருத்தும் விக்கல், துன்பம் செய்கின்ற பேதி, சீழ்நோய், அண்ட வாதங்கள், சூலை முதலிய எவைகளும் என்னிடம் வந்து சேராமல் எனது பிராணுகிய திண்ணிய வேல் காப்பதாக.

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை யாகுபஃறொழுநோய் கக்கல்
இமைக்குமுன் னுறுவ லிப்போ டெழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழு தேனுமென்னை யெய்தாம லருள்வேல் காக்க.

நமைப்புஉறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மையாகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறுவலிப்போடு எழுபுடைப்பகந்தர் ஆதி
இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க.

நமைச்சலையுண்டு பண்ணும் கிரந்தி, வீக்கம், பொருந்தும் பாண்டு; சோர்வு அளிக்கும் கருமை மற்றும் வெண்மை நிறங்களையுடைய பல வித மாகிய தொழு நோய்கள், கக்கல், சடுதியில் வரும் வலிப்பு, பருத்துத் தோன்றும் பவித்திரம் முதலிய நோய்கள் ஒரு கணமேனும் என்னைச் சேராமல் அருள் வடிவான வேல் காப்பதாக.

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினுங் கரிய மேனி யெமபடர் வரினு மென்னை
ஒல்லையிற் றார காரி ஓம்ஐம் ரீம்வேல் காக்க. 21

பல்லது கடித்து மீசை படபட என்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க.

பல்லைக் கடித்து மீசைப்பட பட வென்று துடிக்கக் கல்லினும் வலியதாய்க் கொடிய நெஞ்சங் காட்டி கண்களை உருட்டி விழித்துக் காரிருளையும் பழிக்கும் கரிய மேனியை உடைய இயமதூதர்கள் வந்தாலும் தாரகாசூரனைச் சங்காரம் செய்த முருகப் பெருமானுடைய ஓம் ஐம் ரீம் வேல் விரைந்து வந்து என்னைக் காப்பதாக.

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த விடத்துமென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க. 22

மண்ணிலும் மரத்தின்மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்நிறை சலத்தின்மீதும் சாரிசெய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின்உள்ளும் வேறுஎந்த இடத்தும் என்னை
நண்ணி வந்து அருளார் சஷ்டிநாதன் வேல் காக்க காக்க.

மண்ணிலும், மரத்தின் மேலும், மலையிலும், நெருப்பின் மேலும், குளிர்ச்சி பொருந்திய நீரின் பேரிலும், சவாரி செல்லும் வாகனத்தின் பேரிலும், ஆகாயத்திலும், பாதளத்திலும், வேறே எந்த இடத்திலும் பொருந்தி வந்து நிறைந்த அருள் உதவும் சஷ்டி நாதனது வேலானது என்னைக் காப்பதாக.

யகரமே போற்சூ லேந்து நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் றன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் றேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க. 23

யகரமேபோல் சூல் ஏந்து நறும்புயன்வேல் முன்காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன்வேல் பின்காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரம்மின் தேவமோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க.

"ய" கர எழுத்துப் போல் முத்தலையுள்ள சூலத்தை ஏந்திய தெய்வ மணங் கமழும் தோள்களையுடை யானது வேலானது எனது முன் பக்கத்தைக் காப்பதாக; "அ" கர முதலான பன்னிரண்டு உயிர் எழுத்துக்களைத் திருக்கண்களாக வுடையவனுடைய வேலானது பின் பக்கத்தைக் காப்பதாக; "ச" கரத்தை முதலாகக் கொண்ட திருவாறெழுத்தான வனுடைய திருக்கை வேல் நடுவில் காப்பதாக. திருமுடிமிசை ஒளிரும் தெய்வக் கிரீடம் விளங்கும் முருகப்பெருமானின் வேலானது கீழிலும் மேலிலும் காப்பதாக.

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிடமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோ னிகலுடைக் கரவேல் காக்க. 24

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளிபங்கன்
செம்சயவேல் கிழக்கில் திடமுடன் காக்க அங்கி
விஞ்சிடுதிசையில் ஞான வீரன் வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்காமத்தோன் இகல்உடைக் கரவேல் காக்க

இனிய மொழியுடைய தெய்வயானை அம்மையாரின் நாயகரும், வள்ளியம்மையாரின் மணாளருமான முருகப் பெருமானது செவ்விய ஜெயந் தந்தருளும் வேலானது கிழக்குத் திக்கில் திடமுடன் காப்பதாக. அக்கினி திசையில் ஞான வீரனது வேல் காப்பதாக. தெற்குத்திக்கில் பகையை உடைத்தெறியும் குறைவில்லாத கதிர் காமத்தோன் திருக் கரத்திலேந்திய வேல் காப்பதாக.

லகரமே போற் காளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழெனை நிருதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்வேல் காக்க. 25

லகரமேபோல் காளிங்கன் அல்உடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த சங்குஅரி மருகன் கைவேல்
நிகழ் எனை நிருதிதிக்கில் நிலைபெறக் காக்க மேற்கில்
இகல் அயில் காக்க வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க.

''ல'' கர எழுத்தின் வடிவம் போல் வளைந்து ஆரவாரித்த காளிங்கன் என்னும் பாம்பின் கரிய உடல் நெளியும்படி அதன் மேல் நின்று அது சிதையும் படி நடம் செய்து வருத்திய சங்கு ஏந்திய திருமாலின் மருகனது திருக்கை வேலானது என்னை நிலைபெறும்படி தென் மேற்குத் திசையில் காப்பதாக. போர் வெல்லும் கூரிய வேலானது மேற்குத்திக்கில் காப்பதாக. வாயு திசையில் குகப் பெருமானது கதிர் வேல் காப்பதாக.

வடதிசை தன்னி லீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் றிக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையி லிருக்கு ஞான்று நவில்கையி னிமிர்கையிற்கீழ்க்
கிடக்கையிற் றூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல் காக்க. 26

வடதிசைதன்னில் ஈசன் மகன் அருள்திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேதபோதகன் வேல் காக்க
நடக்கையில்இருக்கு ஞான்று நவில்கையில் நிமிர்கையில்கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்று கிரிதுளைத்துள வேல் காக்க.

வடக்குத் திக்கில் சிவகுமாரனது அருள் திருவேல் காப்பதாக. ஈசானிய திசையில் வேதங்களுக்கு ஆசானாகிய முருகப் பெருமான் வேல் காப்பதாக. நடக்கும் போதும், உட்கார்ந்திருக்கும் போதும், பேசும் போதும், நிமிர்ந்து எழும் போதும் தரையில் கிடக்கும் போதும் தூங்கும்போதும் கிரவுஞ்ச மலையைத் துளைத்து நிலைத்து நிற்கும் வேல் காப்பதாக.

இழந்துபோ காத வாழ்வையீயுமுத் தையனார் கைவேல்
வழங்குநல் லூணுண் போது மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும்பாதம் பணிந்து நெஞ்சடக்கும்போதுஞ்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன் மயிலுங் காக்க. 27

இழந்துபோகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்
வழங்குநல் ஊண் உண்போதும் மால்விளையாட்டின்போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழுங்குணத்தோடே காக்கத் திடமுடன் மயிலும் காக்க.

மாளா இன்ப வாழ்வாகிய பேரின்ப வீட்டினை அளிக்கும் முத்துக்குமரனது கைவேலானது வழங்கும் நல்ல உணவு உண்ணும் போதும், காதல்

மயக்கம் தரும் விளையாட்டின் போதும், தொன்மை யான தேவர்களும் போற்று கின்ற திருப்பாதங் களைப் பணிந்து மனதைப் பிறவழிகளிற் போக்காது ஒரு முகப்படுத்தும் போதும் செழிய குணத்தோடே காப்பதாக. திடமாக மயிலும் காப்பதாக.

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளரறு முகச்சி வன்றான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்னெ லோஞ்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்ப கற்கால் சிவகுரு நாதன் காக்க. 28

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச்சிவன்தான் வந்துஎனைக் காக்க காக்க
ஒளி எழு காலை முன்எல் ஓம் சிவசாமி காக்க
தெளி நடு பிற்பகல்கால் சிவகுருநாதன் காக்க.

இளமையிலும், வாலிபத்திலும், நரை, திரை, நோய், முதலியவை வந்தடையும் மூப்புப் பருவத்திலும், அறுமுகச் சிவன் எழுந்தருளி வந்து என்னைக் காப்பாராக. சூரியோதய காலத்திலும், முற்பகலிலும், பிரணவப் பொருளை சிவனுக்கு உபதேசித்த சுவாமிநாதன் காப்பாராக. தெளிந்த நடுப்பகலிலும், பிற்பகலிலும் சிவ குருநாதன் காக்க.

இறகுடைக் கோழித் தோகைக் கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பினி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப னடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழக னெங்கோன் மாறுது காக்க காக்க. 29

இறகு உடைக்கோழித் தோகைக்கு இறை முன் இராவிற் காக்க
திறல் உடைச் சூர்ப்பகைத்தே திகழ் பின்இராவிற்காக்க

நறவு சேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறை தொழு குழகன் எம்கோன் மாறுது காக்க காக்க.

இறகினேயுடைய கோழிக்கும், தோகையை யுடைய மயிலுக்கும் இறைவனுகிய முருகப் பெருமான் முன் இரவிற் காப்பாராக. வலிமையுடைய சூரபது மனேச்சங்கரித்த தெய்வம், திகழ்கின்ற பின் இரவில் காப்பதாக. தேன் பொருந்திய மாலே யணிந்தும் திருப்பாதங்களில் சிலம்பை அணிந்துமுள்ள முருகப் பிரான் நடுநிசியில் காப்பாராக. வேதங்கள் தொழும் கட்டிளங் குமரனுகிய எம் கோமான் எப்போதும் மாறுது காப்பாராக.

இனமெனத் தொண்டரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற் சரவண பவனுர் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே. 30

இனம் எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டம் தன்னில் சரவணபவனுர் காக்க
நனி அனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள் தான் காக்க வந்தே.

சேரத்தக்க இனமாகத் திருத் தொண்டர்களோடும் இணக்கிடும் அருள் என்னும் பொருளே அன்பர்களுக்கு வழங்கும் செட்டிக் குமரன் காப்பாராக. தனிமையில் உள்ள போதும், கூட்டத்திலுள்ள போதும், சரவணபவனுர் காப்பாராக. கந்தர் அனுபூதியை அருளிய ஸ்ரீ அருணகிரி நாதருக்கு அதிபராகிய முருகப் பிரான் காப்பாராக. இதனேக் கனிவுடன் சொல்லியருளிய ஸ்ரீ குமரகுருதாச சுவாமியாகிய இப்பாடலாசிரியரது ஆன்ம நாத ராகிய முருகப் பெருமான் எழுந்தருளி வந்து காத்தருள் வராக.

ஓம்.

பரிபூஜன பஞ்சாமிர்தவண்ணம்

இப்பாடல்கள் பாடிய காலம் கி.பி. 1891க்குச் சரியான கர வருடம் கார்த்திகை 24ம் நாள் செவ்வாய்க்கிழமை

இப் பாடல்களைத் தம் திருச்செவியில் ஏற்றருளி, தமது பிரீதி வெளிப்படுத்திய காலம் கி. பி. 1919க்குச் சரியான சித்தார்த்தி வருடம் சித்திரை மாதம், ஒரு குருவாரத்தில் என்க.

பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் வரலாறும், பாடல்களும், பொழிப்புரையும்.

சுவாமிகள், பாம்பன் பதியில் வாழ்ந்து வரும் காலம், அவர்களைக் காண, அவருடன் அளவளாவ, அன்பர்கள் பலர் வந்து போவது வழக்கம். அவ்வாறு அவர்களைச் சந்திக்க வந்த திருவனந்தபுரத்து வாசியான, ந. சுப்பிரமணியப் பிள்ளை, என்னும் பெயரிய சிவநேசச் செல்வர் ஒரு நண் பகலில் சுவாமிகளுடன் இருக்கும் பொழுது, ஆங்கே வந்த வேறொரு அன்பர் தமக்குப் பாடமாயிருந்த சிற்றின்ப வண்ணம் ஒன்றனை யினிமையாகப் பாடினார். அதனைக் கேட்டிருந்த ந. சுப்பிரமணியப் பிள்ளை, நம் கடவுளாகிய குமார சுவாமியின் பேரில் சுவாமிகளும் வண்ணம் பாட வேண்டும் என்ற திவ்ய வேண்டுகோளை அங்கீகரித்து, சுவாமிகள் பஞ்சாமிர்த வண்ணத்தைப் பாடி முடித்தார்.

பஞ்சாமிர்த வண்ணம் பாடிய காலம் கலியுகம் 4993க்குச் சரியான கரவருடத்துக் கார்த்திகை மாதம் 24ம் தேதி

செவ்வாய்க்கிழமையாகும். ஆங்கில ஆண்டு கி.பி. 1891 எனலாம். இந்த வண்ணத்தைப் பக்தியோடும் ஒரு முறை பாடி முடிப்போர்க்கு, குமரக் கடவுட்குப் பஞ்சாமிர்தத்தால் ஐந்து அபிடேகம் செய்த பலன் கிடைக்கும் என்பது சரதம். அங்ஙனம் பலமுறை அவ்வாறு பாராயணம் செய்தால் அஃதனுல் விளையும் பலனும் அத்துணையே யாம்.

பரிபூஜன பஞ்சாமிர்தம் எனும் பாடல் சுவாமிகளால் ஒரே நாளில் பாடப்பட்டது ஆகும். சுவாமிகள் இயற்றிய 6666 பாடல்களை ஆறு மண்டலங்களாகத் தொகுத்து நான் காவது மண்டலத்தைச் சார்ந்த முதல் நூலாகிய சிறு நூற் றிரட்டில் உள்ளது இந்தப் பஞ்சாமிர்த வண்ணம். சிறந்த ஆராதனைக் குரிய ஐந்து அமிழ்த சந்தப்பா என்பது அதன் பொருள். இதில் உள்ள பாக்கள் ஐந்தும் வெவ்வேறு சந்தங் களில் அமைந்தவைகளாகும்.

பால், தயிர், நெய், சருக்கரை, தேன் ஆகிய ஐந்து வகை அபிடேகப் பொருளால் இறை மூர்த்தங்களுக்கு அபிடேகம் செய்யும் போது பாடத் தக்கவை இப்பாடல்கள். தேவாலயங் களில் அன்றித் தனியே யிருந்து ஒரு முறையோ பன்முறை யோ ஓதினுலும், அவ்வபிடேகப் பலனையும் இறை காட்சியும் காணலாகும். மான சீகமாக வண்ண பாராயணம் நிகழ்த் தினுலும் அவ்வாருள பலன் கிட்டும் என்பதற்கான உண்மை நிகழச்சிகளைப் பின்னர்க் கூறுவோம்.

பாட்டின் பொருள் உணர்ந்து ஓதுதல் நற்பயன் பயக்கும் என்பதால் வண்ணப் பாடல்களுக்கு உரிய கருத்துரைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவைகளை ஊன்றிப் படித்துச் சிறு நூற்றிரட்டு எனும் நூலிலுள்ள விளக்க உரை, விசேட உரைகளையும் படித்துப் பயன் பெற்றுய்ய வேண்டுகிறேம்.

1. பால் வண்ணம்

இலங்கு நன்கலே விரிஞ்சனே
டனந்த னுஞ்சத மகன்சதா
வியன்கொ டப்பியர் களும்பொனு
டுறைந்த புங்கவர் களுங்கெடா

தென்றுங் கொன்றைய ணிந்தோனுர்
தந்தண் டின்றி ரளுஞ்சேயா
மென்றன் சொந்தமினுந்தீதே
தென்றங் கங்கணி கண்டோயா

தேந்து வன்படைவேல் வலி சேர்ந்த திண்புயமே
யேய்ந்த கண்டகர்கா ஞெடை மூஞ்சி சுந்தரமோ

டெலும்பு றுந்தலே களுந்து ணிந்திட
வடர்ந்த சண்டைக டொடர்ந்துபே
யெனுங்கு ணுங்குக ணிணங்க ளுண்டரன்
மகன்பு றஞ்சய மெனுஞ்சொலே
— களமிசையெழுமாறே

துலங்கு மஞ்சிறை யலங்கவே
விளங்க வந்தவொர் சிகண்டியே
துணிந்தி ருந்துயர் கரங்கண்மா
வரங்கண் மிஞ்சிய விரும்புகூர்

துன்றுந் தண்ட மொடம்பீர்வாள்
கொண்டண் டங்களி னின்றூடே
சுண்டும் புங்கம ழிந்தேலா
தஞ்சும் பண்டசு ரன்சூதே

சூழ்ந்தெ ழும்பொழுதே கரம் வாங்கி யொண் டினிவே
றூண்டி நின்றவனே கிளே யோங்க நின்றுளமா

துவந்து வம்பட வகிர்ந்து வென்றதி
பலம்பொ ருந்திய நிரஞ்சனு
சுகங்கொ ளுந்தவர் வணங்கு மிங்கித
முகந்த சுந்தர வலங்க்ருதா

— அரிபிரமருமேயோ

அலைந்து சந்தத மறிந்திடா
தெழுந்த செந்தழ லுடம்பினு
ரடங்கி யங்கமு மிறைஞ்சியே
புகழ்ந்த வன்றுமெய் மொழிந்தவா

அங்கிங் கென்பத றுந்தேவா
யெங்குந் துன்றிநி றைந்தோனே
யண்டுந் தொண்டர்வ ருந்தாமே
யின்பந் தந்தரு ளுந்தாளா

ஆம்பி தந்திடுமா மணி பூண்ட வந்தனையா
வாண்ட வன்குமராவெனை யாண்ட செஞ்சரணு

அலர்ந்த விந்துள வலங்க லுங்கடி
செறிந்த சந்தன சுகந்தமே
யணிந்து குன்றவர் நலம்பொ ருந்திட
வளர்ந்த பந்தனை யெனும் பெணுள்

— தனையனை மணவாளா

குலுங்கி ரண்டுமு கையுங்களா
ரிருண்ட கொந்தள வொழுங்கும்வேல்
குரங்கு மம்பக மதுஞ்செவா
யதுஞ்ச மைந்துள மடந்தைமார்

கொஞ்சும் புன்ரெழிலுங்காலோ
ருஞ்சண் டன்செய லுஞ்சூடே
கொண்டங் கம்பட ருஞ்சீழ்நோ
யண்டந் தந்தும்வி ழும்பாழ்நோய்

கூன்செயும்பிணிகால் கரம் வீங்கமுங்கலும்வாய்
கூம்ப ணங்குகணேய் துயர் சார்ந்தபுன்கணுமே

தயின்கொ ளுங்கடல் வளைந்த விங்கெனை
யடைந்தி டும்படி யினுஞ்செயேல்
குவிந்து நெஞ்சமு ளணைந்து நின்பத
நினைந்து யும்படி மனஞ்செயே
—திருவருண் முருகோனே

பிரமதேவனும், திருமாலும், இந்திரனும், கந்த வேளின் தம்பியர் எனும் பெருமை வாய்ந்த இலக்கத் தொன்பது வீரர்களும். பொன்னுடு வாழ் தேவர்களும், கொன்றையணி சிவனாரின் சேனைக் கூட்டங்களாகிய பூதங்களும், ஆகிய எல்லாம் எமது சொந்தம். ஆதலின் இனியும் அடியார்க்கு வரும் குறை யாதுளது என்று கூறிப்போரின் அணி வகுப்புக்களை கண்டு வேலேந்திய விமலன் நிற்கிறார். அது போழ்து, அசுரர்களுடைய கால், தொடை முகம், கழுத்து தலைகளும் துணிந்திடப் பிசாசுக் கூட்டங்கள் இறந்தவரது கொழுப்பை உண்டு சிவகுமாரன் புறம் ஜெயம் எனும் முழக்கமே களத்தில் எழும்படி சண்டைகள் தொடர்ந்து நடந்தன.

அந்தப் போரில் இந்திரனுன மயில் மேல் ஆரோ கணித்துப் பெருமான் போர் செய்ய, சூரபதுமன், கரங் களினின்று வரும் கூரிய படைகளாகிய தண்டு, அம்பு, வாள் முதலியனவுடன் சூரன் அண்ட வெளியிலிருந்து போரிட, அவனது அம்புகளெல்லாம் பயனின்று அழிவது கண்டு அஞ்சி, வஞ்சனையாய் மாயப் போருக்குப் புறப் பட்ட போது, அம்மாயம் அழிய வேற்படையைத் தூண்டி நின்றவனே! சூரனாகிய மாமரம் இரு கூறாகும் படி பிளந்து வென்ற களங்கமற்றவனே! பேரின்பத்தை விரும்பிய தவசியர் உம்மை வணங்கும் குறிப்பை உவந் தருளும் முருகோனே!

திருமாலும், பிரமனும், திருவடியும், திருமுடியும், காணவும் அலைந்தும், அவர்கள் அறிய முடியாமல் எழுந்த அழல் திருமேனியுடைய சிவனார், தமது அங்க மெல்லாம் அடங்கி, வணங்கித்துதித்த அப்போது அவர்க்குப் பிரணவப் பொருளை மொழிந்தவனே! அங்கு இங்கு என்று சுட்டியறிய முடியாதபடி எங்கும் நீக்கமற நிறைந்தவனே, உன்னையே தஞ்சமென்று வந்தடையும் அடியவர் வருந்தாதவாறு பேரின்பம் தந்தருளும் திருவடி யுடையவனே. சிறந்த முத்துக்களைப் பரல்களாகக் கொண்ட அழகிய சிலம்புடையவனே. சிவனார் திருக் குமரனே. எனை அடிமை கொண்ட சிவந்த தாளனே. வாசமுள்ள கடம்பு மாலைகளும் சந்தனமும் அணிந்து வேடர் மகளாய் வளர்ந்த வள்ளியம்மையை அணைக்கும் மணவாளா.

இரு தனங்களையும், ஒழுங்கான கூந்தலையும், கூரிய வேலும் நாணும் கண்களையும், சிவந்த வாயையும், உடைய மாதர்களைக் கொஞ்சிக் குலாவும் இழிதொழி லும், எமனது பயங்கரச் செயலும், உடலிற்றோன்றும் கட்டி, அண்டவாதம், பல்நோய், உடலைக் கூனாக வளைக்கும் நோய், கால் கை வீக்கம், வாய் திறக்க வொட்டாமல் மூடி விடும் புண், கண்ணோய், பிற துன்பங்கள் தரும் நோய்கள் முதலியவை என்னை அணு காமலும், கடல் சூழ்ந்த இவ்வுலகை யான் மீண்டும் அடையும்படி செய்யாதே. ஒரு முகமாய் மனங்குவிந்து உள்ளே உன்னை அணைந்து. உன் திருவடிகளை நினைந்து உய்யுமாறு திருவுளம் பற்றி யருளுவாயாக.

2. தயிர் வண்ணம்

கடித்துண ரொன்றிய முகிற்குழ லுங்குளிர்
கலைப்பிறை யென்றிடு நுதற்றில கந்திகழ்
கா சுமையா ளிளமா மகனே

களங்க விந்துவை முனிந்து நன்கது
கடந்து விஞ்சிய முகஞ்சி றந்தொளி
கா லயிலார் விழிம ' மருகா

—விரைசெறியணிமார்பா.

கனத்துயர் குன்றையு மிணைத்துள கும்பக
லசத்தையும் விஞ்சிய தனத்திசை மங்கை கொள்
காதலனுன் முகனு டமுதே

கமழ்ந்த குங்கும நரந்த முந்திமிர்
கரும்பெ னுஞ்சொலை யியம்பு குஞ்சரி
கா வலனே குகனே பரனே

—அமரர்கடொழுபாதா.

உடுக்கிடை யின்பணி யடுக்குடை யுங்கன
வுரைப்புயர் மஞ்சுறு பதக்கமொ டம்பத
வோ வியநூ புரமோ திரமே

ருயர்ந்த தண்டொடை களுங்க ரங்களி
லுறும்ப சுந்தொடி களுங்கு யங்களி
லூ ரெழில்வா ரொடுநா சியிலே

—மினுமணிநகையோடே.

உலப்பறி லம்பக மினுக்கிய செந்திரு
வுருப்பணி யும்பல தரித்தடர் பைந்தினை
யோ வலிலா வரணே செயுமா

றெழுங்கு றும்புன மிருந்து மஞ்சுல
முறைந்த கிஞ்சுக நறுஞ்சொ லென்றிட
வோ லமதே யிடுகா னவர்மா

—மகளெனுமொருமானும்,

மடக்கொடி முன்றலை விருப்புடன் வந்ததி
வனத்துறை குன்றவ ருறுப்பொடு நின்றிள
மா னினியே கனியே யினிநீ

வருந்து மென்றனை யணைந்து சந்தத
மனங்கு ளிர்ந்திட விணங்கி வந்தரு
ளாய் மயிலே குயிலே யெழிலே
— மடவனநினதேரார்,

மடிக்கொரு வந்தன மடிக்கொரு வந்தனம்
வனைக்கொரு வந்தனம் விழிக்கொரு வந்தனம்

வா வெனுமோர் மொழியே சொலுநீ
மணங்கி ளர்ந்தந லுடம்பி லங்கிடு
மதங்கி யின்றுள மகிழ்ந்திடும்படி
மான்மகளே யெனையா ணிதியே
— எனுமொழிபலநூறே,

படித்தவ டன்கைகள் பிடித்துமு னஞ்சொன
படிக்கும ணந்தரு ளளித்தவ னந்தகிர்
பா கரனே வரனே யரனே

படர்ந்த செந்தமிழ் தினஞ்சொ லின்பொடு
பதங்கு ரங்குந ருளந்தெ ளிந்தருள்
பா வகியே சிகியூ ரிறையே
— திருமலிசமருரா,

பவக்கடலென்பது கடக்கவு நின்றுணை
பலித்திட வும்பிழை செறுத்திட வுங்கவி
பா டவுநீ நடமா டவுமே

படர்ந்து தண்டயை நிதஞ்செ யும்படி
பணிந்த வென்றனை நினைந்து வந்தருள்
பா லனனே யெனையாள் சிவனே
— வளரயின் முருகோனே (1)

வாசமுள்ள கருங் கூந்தலையும், பிறைச் சந்திரனை ஒத்த நெற்றியில் திலகம் விளங்கும் உமையம்மையின் இளங்குமரனே. சந்திரனையும் வென்ற ஒளி வீசும் வேல்

போன்ற விழிகளையுடைய இலக்குமியின் மருகனே. வாசனை நிறைந்த மாலையணிந்த திருமார்பனே. மலையையும் கும்ப கலசத்தையும் விடப் பருமையினும், பெருமையிலும் விஞ்சிய தனபாரங்களையுடைய சரஸ்வதியை நாவில் கொண்ட நான்முகன் விரும்பும் அமுதமே. குங்குமமும், கஸ்தூரியும் அணிந்த கரும்பென இனிக்கும் சொல்லைப் பேசும் தேவயானை கணவனே! குகனே! பரேன! தேவர் தொழும் திருவடியுடையானே.

உடுக்கை போன்ற இடையில் ஒட்டியாணம், மடிப்பான உடையும், பொன்பதக்கமும், திருவடிகளில் சிலம்பும், விரலில் மோதிரமும், மார்பில் மலர் மாலைகளும், கைகளில் பச்சை வளையல்களும், மார்பில் கச்சும், மூக்கில் அழகிய மூக்குத்தி, புல்லாக்கும், பொன் வட்டத்த கட்டணி முதலிய திருவா பாரணங்களும் அணிந்து, தினைக் கொல்லையிலிருந்து ஆலோலக்குரல் காட்டும் வேட்டுவ மாஞன,

வள்ளியம்மையார் முன்பாக ஒருதலைக் காமம் கொண்டவனைப் போல வந்து, கானக் குறவர் உருவில் நின்று, மானே, கனியே, விரகத்தால் வருந்தும் என்னை அணைந்து எப்போதும் மனங்குளிருமாறு சம்மதித்து வந்தருளாய்; மயிலே, குயிலே அழகே, அன்னமே!

உனது சேலைக்கு வணக்கம், திருவடிக்கு வணக்கம், வளைகளுக்கு வணக்கம், விழிகளுக்கு வணக்கம், வாவென்னும் ஓர் மொழியே நீ சொல்லுக. மணம் மிக்க நல்லுடல் எழிலுள்ள யுவதியே. என் உள்ளம் மகிழுமாறு மான் மகளே என்னையுடைய செல்வமே, என்னையாண்டு கொள்க என்பன போன்ற பல நூற்றுக் கணக்கான சொற்களைப் படித்து, அவளது கைகளைப் பிடித்து முன் பிறப்பிலே அவளுக்கு வாக்களித்தபடிக்குத் திருமணம் செய்து அருள் பாலித்த கருணையே, வரனே,

அரனே, செந்தமிழ்ப் பாக்களால் தினமும் துதிக்கும் இன்பத்துடன் உன் திருவடி வணங்கும் தொண்டர் களின் உள்ளக்குறிப்பை அறிந்து அருளும் அக்னி கர்ப் பனே மயிலேறும் இறையே, திருப்போரூரானே, காக்கும் கடவுளே, என்னை ஆளும் அறுமுகச்சிவனே வேலேந்தும் இளம்பூரணனே. பிறவிக்கடல் என்பது கடக்கவும், உனது துணை கிடைக்கவும் என் பிழைகளைக் களையவும், அடியேன் கவிபாடவும், நீ மகிழ்ந்து நடனம் செய்யவுமே திருவுளம் பற்றி, திருவருளைச் செய்யுமாறு தினமும் பணிந்த என்னையும் பொருளாக எண்ணி மகிழ் வுடன அருள்வாயாக.

3. நெய் வண்ணம்

வஞ்சஞ்சூ தொன்றும்பேர்
துன்பஞ் சங்கட மண்டும்பேர்
மங்கும்பேய் நம்பும்பேர்
துஞ்சும் புன்சொல்வ ழங்கும்பேர்
மான் கணார் பெணார் தமா லினான்

மதியது கெட்டுத் திரிபவர் தித்திப்
பெனமது துய்த்துச் சுழல்பவ ரிச்சித்தே
மனமுயி ருட்கச் சிதைத்துமே
நுகர்தின துக்கக் குணத்தினோர்
வசையுறு துட்டச் சினத்தினோர்
மடிசொல மெத்தச் சுறுக்குளோர்
வலியே றியகூ ரமுளோ ருதவார்
நடுவே துமிலா ரிழிவார் களவோர்
மணமல ரடியிணை விடுபவர் தமையினு
நணுகிட வெனைவிடு வதுசரி யிலையே

— தொண்டர்கள் பதிசேராய்,

விஞ்சுங்கார் நஞ்சந்தா னுண்டுந்
திங்கள ணிந்துங்கால்
வெம்பும்போ தொண் செந்தாள்
கொண்டஞ் சஞ்சவு தைந்தும்பூ
மீன் பதா கையோன் மெய்வீ யுமா

விழியைவி ழித்துக் கடுகவெ ரித்துக்
கரியையு ரித்துத் தனுமிசை சுற்றிக்கோள்

விளைழவறு சுத்தச் சிறப்பினர்
பிணைமழு சத்திக் கரத்தினர்
விஜயவு டுக்கைப் பிடித்துளார்
புரமதெ ரிக்கச் சிரித்துளார்

விதிமா தவனு ரறியா வடிவோ
ரொருபா திபெணு யொளிர்வோர் சுசிநீள்
விடைதனி விவர்பவர் பணபண மணிபவர்
கனைகழ லொலிதர நடமிடு பவர்சேய்
—என்றுள குருநாதா,

தஞ்சஞ்சேர் சொந்தஞ்சா
லஞ்செம் பங்கய மஞ்சுங்கா
றந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் தகீ தகீ தகீ தகீ

தநிமிதி தத்தித் தரிகிட தத்தத்
திரிகிட தத்தத் தெயெனந டிக்கச்சூழ்

தனிநட னக்குத் தியத்தினன்
மகிடனை வெட்டிச் சிதைத்துளாள்
தடமிகு முக்கட் கயத்தினள்
சுரதனு வக்கப் பகுத்துளாள்

சமிசூ விளமோ டறுகா ரணிவா
ளொருகோ டுடையோ னனையாய் வருவாள்
சதுமறை களும்வழி படவளர் பவண்மலை
மகளென வொருபெய ருடையவள் சுதனே
—அண்டர்கடொழுதேவா,

பிஞ்சஞ்சூழ் மஞ்சொண்சே யுஞ்சந்
தங்கொள்ப தங்கங்கூர்
பிம்பம்போ லங்கஞ்சா ருங்கண்
கண்களி லங்குஞ்சீ
ரோங் கவே யுலா வுகால் விஞோர்

பிரமஞெ டெட்டுக் குலகிரி திக்குக்
கரியொடு துத்திப் படவர வுட்கப்பார்

பிளிற நடத்திக் களித்தவா
கிரிகெட வெக்கித் துளைத்தவா
பிரியக மெத்தத் தரித்தவா
தமியனை நச்சிச் சுளித்தவா

பிணமா முனமே யருள்வா யருள்வாய்
துனியா வையுநீ கடியாய் கடியாய்
பிசியொடு பலபிழை பொறுபொறு பொறுபொறு
சததமு மறைவறு திருவடி தரவா
—என்களி முருகோனே. (1)

வஞ்சனையும் சூதும் உள்ளவர்களும், பிறருக்குத் துன்பமும் துயரும் தரும் துர்க்குணமுடையவர்களும், அழியும் பேய்களை நம்புகிறவர்களும், பிறர்க்கு வாட்டத்தை உண்டாக்கும் இழிப்புரையை வழங்குவோரும், பொது மகளிர் மயக்கால் மதிகெட்டு அலைபவர்களும், இனிப்பு எனக் கள்ளைக் குடித்து ஆடுபவர்களும், ஆடு

முதலியவற்றைக் கொன்று புலால் உண்ணும் துக்க குண முடையவர்களும் துஷ்ட கோபமுடையோரும், பொய் புகலமிகச் சுறுசுறுப்புடையோரும், பொறாமையுடையோரும் உலோபிகளும், நடுநிலையிகந்தவர்களும் இழிந்தவரும், கள்வரும், நின்மலரடிகளைத் தொழாது விடுவோரும் ஆகியோரை நணுகுமாறு என்னை விட்டு வைப்பது இனியும் சரியாகாது. ஆகலின் அடியவர் வாழ் பதியில் என்னைச் சேர்ப்பாயாக.

கொடிய விஷம் உண்டும், மதி சூடியும், எமனார் கோபித்து மார்க்கண்டேயர் மேல் பாய்ந்து வந்த போது வாமச் சேவடியால் அவனது ஐம்பூதங்களும் அஞ்ச உதைத்தும், மலர்க்கணைகளையும், மீனக் கொடியையும் உடைய மன்மதனது உடல் அழிய நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்தும், கஜமுகா சூரனைக் கொன்று அவன் தோலை உரித்து உடலில் சுற்றிய தூய பெருமையரும், மான், மழு, சூலமேந்திய கரத்தினரும், உடுக்கை ஏந்தியவரும், திரிபுறமெரிக்கச் சிரித்தவரும், அயனும் அரியும் அறியா வடிவினரும், தம் திருமேனியில் ஒரு பாதி பெண்ணாய் விளங்குவோரும், விடையேறும் விமலரும் படமுடைப் பாம்பணியும் பரமரும், நடமிடும் நம்பரும், ஆகிய சிவபிரானாரின் சேயே எனக் கூறவுள்ள குரு, நாதனே!

அடைக்கலம் புக உரிமை கொள்ளும் செய்ய செந்தாமரையும் ஒப்பாவதற்கு அஞ்சும் திருவடிகள், தந்தந்தா, தந்தந்தா, தந்தந் தந்தன தந்தந்தா தாந் ததீ ததீ ததீ ததீ ததீ ததிமிதி தத்தித் தரிகிட தத்தத் திரிகிட தத்தத் தெயென நடிக்குமாறு தாள ஒத்துக்கள் அமைந்த ஒப்பற்ற நடனத் தொழில் வல்லாளும் மகிடா சூரனை வெட்டி மடித்தவளும் சேல் போன்ற முக்கண்களையுடையவளும், சங்கரன் உடலில் பாகங்

கொண்டவளும், வன்னி, வில்வமொடு அறுகு, ஆத்தி அணிபவளும், ஒற்றைக் கொம்பனான விநாயகனது அன்னையாய் வருபவளும், நான் மறைகளும் வழிபட வளர்பவளும், ஆகிய மலையரசன் மகளாகிய பார்வதி என்ற பெயருடையவள் குமாரனே. தேவர் தொழும் தேவனே.

சிவந்த கால்களும், தோகை நடுவில் உள்ள கண்ணாடி போன்ற கண்களில் விளங்கும் சிறப்பு ஓங்கு மாறு உலவும் போது, வானோரும், பிரமனோடு எண் திக்குக் குல கிரிகளும், எண்திசை யானைகளோடு புள்ளி யுள்ள படம் கொண்ட பாம்பும் நடுங்கி வருந்த, பூமி யதிர வரும் மயிலை நடத்திக் களித்தவனே. மலை அழிய வேலால் துளைத்தவனே. கடம்பு புனை ஐயனே. பழநிக்குப் போக உமது கட்டளை பிறந்தது என்று பொய் புகன்ற எளியேனை மறக்கருணை காட்டிக் கோபித்தவனே. எனது அன்பிற்குரிய முருகோனே. அடியேன் பிணமாய்ப் போவதற்கு முன்பே அருள்வாய் அருள்வாய் என் துன்பம் எல்லாம் ஒழிப்பாய். பொய் முதலிய பல பாதகப் பிழைகளைப் பொறுத்தருள்க. பொறுத்தருள்க. என்றும் அழிவற்ற நினது திருவடிகளை உதவுமாறு வந்தருள்க.

4. சருக்கரை வண்ணம்

மாத முந்தினம் வார முந்திதி
  யோக மும்பல நாள்க ளும்படர்
    மாதி ரந்திரி கோள்க ளுங்கழல்
      பேணு மன்பர்கள் பான லந்தர

வற்சல மதுசெயு மருட்குணு
சிறந்த விற்பன ரகக்கணு
மற்புய வசுரரை யொழித்தவா
வனந்த சித்துரு வெடுத்தவா

மாலயன்சுரர் கோனு மும்பரெ
லாரும் வந்தன மேபு ரிந்திடு
வான வன்சுடர் வேல வன்குரு
ஞான கந்தபி ரானெ னும்படி

மத்தக மிசைமுடி தரித்தவா
குளிர்ந்த கத்திகை பரித்தவா
மட்டறு மிகலயில் பிடித்தவா
சிவந்த வக்கினி நுதற்கணு

— சிவகுருவெணுநாதா

நாத விங்கித வேத மும்பல்பு
ராண முங்கலே யாக மங்களு
நாத னுன்றனி வாயில் வந்தன
வேயெ னுந்துணீ பேய றிந்தபி

னச்சுவ திவணெது கணித்தையோ
செறிந்த ஷட்பகை கெடுத்துமே
னட்புடை யருளமிழ் துணிற்சதா
சிறந்த துத்தியை யளிக்குமே

நாளு மின்புயர் தேனி னுஞ்சுவை
யீயும் விண்டல் மேவ ருஞ்சுரர்
நாடி யுண்டிடு போஜ னந்தனி
லேயும் விஞ்சிடு மேக ரும்பொடு

நட்டமின் முப்பழ முவர்க்குமே
விளைந்த சர்க்கரை கசக்குமே

நற்கசி முற்றிய பயத்தொடே
கலந்த புத்தமு தினிக்குமோ
— அதையினியருளாயோ,

பூத லந்தனி லேயு நன்குடை
மீத லந்தனி லேயும் வண்டறு
பூம லர்ந்தவு ஞூத வம்பத
நேய மென்பது வேதி னந்திகழ்

பொற்புறு மழகது கொடுக்குமே
யுயர்ந்த மெய்ப்பெயர் புணர்த்துமே
பொய்த்திட வினைகளை யழிக்குமே
மிகுந்த சித்திகள் பெருக்குமே

பூர ணந்தரு மேநி ரம்பெழி
லாத னந்தரு மேய ணிந்திடு
பூட ணந்தரு மேயி கந்தனில்
வாழ்வ துந்தரு மேயு டம்பொடு

பொக்கறு புகழினை யளிக்குமே
பிறந்து செத்திட றுலைக்குமே
புத்தியி லறிவினை விளக்குமே
நிறைந்த முத்தியு மிசைக்குமே
— இதைநிதமுதவாயோ,

சீத ளஞ்சொரி கோதில் பங்கய
மேம லர்ந்திடு வாவி தங்கிய
சீர டர்ந்தவி ராவி னன்குடி
யேர கம்பர பூத ரஞ்சிவ

சித்தரு முனிவரும் வசித்தசோ
லையுந்தி ரைக்கட லடிக்கும்வாய்
செற்கண முலவிடு பொருப்பெலா
மிருந்தளி த்தருளயிற்கையா

தேனு றைந்திடு காண கந்தனின்
மாளி ளஞ்சுதையாலி ருஞ்சரை
சேரு டம்புத ளாட வந்தசன்
யாச சுந்தர ரூப வம்பர

சிற்பர வெளிதனி லைடிக்குமா
வகண்ட தத்துவ பரத்துவா
செப்பரும் ரகசிய நிலைக்குளே
விளங்கு தற்பர திரித்துவா

— திருவளர்முருகோனே. (1)

மாதம், நாள், வாரம், திதி, யோகம், நக்ஷத்திரங்கள், கிரகங்கள் ஆகியவை உனது திருவடியை விரும்பிப் பரவும் அன்பர்களுக்கு நலமே செய்யுமாறு அன்புளம் பற்றும் அருட்குணனே. சிறந்த ஞானிகளது உள்முகத்தில் ஒளிர்பவனே. மற்போரில் வல்ல தோள்களையுடைய அசுரரை ஒழித்தவனே. முடிவு காண முடியாத ஞான உருவெடுத்தவனே. அரி, அயன், அமரர் காவலனாகிய இந்திரன் மற்ற தேவர்களும் வணங்கும் வானவனும், கதிர்வேலனும், குருபரனும், ஞான கந்த பிரான் என விளக்குதற்குத் தலையில் கிரீடம் அணிந்தவனே. குளிர்ந்த மாலை தாங்கியவனே. ஒளி பொருந்திய வேலேந்தியவனே. சிவந்த தீயுமிழும் நெற்றிக் கண்ணனே. சிவகுரு எனும் நாதனே.

ஒலிமயமான வேதமும், புராணமும், கலைகளும் ஆகமங்களும் ஆகியவை, நாதனே! உனது ஒப்பற்ற திருவாக்குகளே என்ற உண்மையை உணர்ந்தபின் இவ்வுலகில் விரும்பத்தக்கது வேறு யாதுளது? காமம் முதலிய அறுபகையை அறுத்து உன் அருளாகிய ஆரமுதத்தை உண்ணுவதானால் அது சிறந்த போகங்களை அளிக்குமே. இனிக்கும் தேனைக் காட்டிலும் இனிய சுவை

தருமே. வானவர் உண்ணும் தேவாம்ருதத்தையும் விட மேம்படும். கரும்பும் முக்கனியும் கூட உவர்க்கும். சர்க்கரையும் கசக்குமே. பாலுடன் கலந்த சோறுகூட இனிக்குமோ? இனிக்காது. அத்தகைய சிறந்த அருளமுதை இனி அருளாயோ?

மண்ணிலும், விண்ணிலும், விகசித்த மலர் போன்றதும் எண்ணுதற்கரியதும், அழகியதுமான உன் திருவடித் தியானம் என்பதுவே, தினமும் விளங்கும் பொலிவுடைய அழகைக் கொடுக்கும்; உயர்ந்த நிலைத்த பெயரைச் சேர்க்கும், வினைகளை அழித்து ஒழிக்கும், மேலான சித்திகளெல்லாம் பெருகிடச் செய்யும், பரிபூரண நிலை தரும். அழகு நிரம்பிய ஆசனம் தரும். அணிந்திடும் அணிகள் கொடுக்கும். இம்மையில் வாழ்வனைத்தையும் உதவும். உடம்போடு அழியாத புகழை ஆக்கும். பிறப்பு இறப்பினைப் போக்கும். புத்தியில் அறிவு துலங்கச் செய்யும். அழியாத பரமுத்தியும் கிட்டச் செய்யும். இதனை என்றும் உதவிடாயோ?

தாமரைத் தடாகங்கள் நிறைந்ததும், பெருமையோடு விளங்கும் திருவாவினன் குடியிலும், திருவேரகத்திலும், திருப்பரங்குன்றத்திலும், சிவஞான சித்தரும் முனிவரும் வசித்த திருச்சோலைமலையிலும், கடல் அலை வீசும் திருச்சீரலைவாயிலிலும் மேகமுலாவும் குன்றுதோறுடவிலும், வீற்றிருந்து அருளும் வேற்கரனே. கானகத்தே மான்மகளாகிய வள்ளியம்மைக்காக மூப்புக் கொண்டு தளர்ந்த உடம்பு தள்ளாட வந்த துறவி வேடம் பூண்ட அழகிய வடிவனே. அழகிய பரமனே. தகராகாசத்தில் நடிக்கும் மா அகண்ட தத்துவ பரத்துவனே. சொலற்கரிய இரகசிய நிலைக்குளே விளங்கு தற்பரனே. ஆக்கலாதி முத்தொழிற்கு உரியானே. முருகோனே. எனக்கு உன் தெய்வ அருட் செல்வத்தை வளரச் செய்தருள்வாயாக.

5. தேன் வண்ணம்

சூலதர ஞராட வோதிமக ளாடநனி
 தொழுபூத கணமாட வரியாடவயனேடு
தூயகலை மாதாட மாநளினி யாடவுயர்
 சுரரோடு சுரலோக பதியாட வெலியேறு

சூகைமுக ஞராட மூரிமுக ஞடவொரு
 தொடர்ஞாளி மிசையூரு மழவாட வசுவீர
சூலிபதி தானுட நீலநம ஞட நிறை
 சுசிநார விறையாட வலிசானி ருதியாட

— அரிகரமகனேடே,

காலி லியு மேயாட வாழ்நிதிய ஞடமிகு
 கனஞால மகளாட வரவேணி சசிதேவி
காமமத வேளாட மாமரைதி யாடவவிர்
 கதிராட மதியாட மணிநாக வரசோகை

காணுமுனி வோராட மாணறமி ஞடவிரு
 கழலாட வழகாய தளையாட மணிமாசில்
கானமயி ருடை ஞானவயி லாடவொளிர்
 கரவாள மதுவாட வெறிசூல மழுவாட

— வயிரமலெறுழோடே,

கோலவரை ஞாஞட நூன்மரும மாடவிரை
 கொளுநீப வணியாட வுடையாட வடனீடு
கோழியய ராதாட வாகுவணி யாடமிளிர்
 குழையாட வளையாட வுபயாறு கரமேசில்

கோகநத மாராமெரு டாறுவிழி யாடமலர்
 சூழகாய விதழாட வொளிராறு சிரமோடு
கூறுகலை நாவாட மூரலொளி யாடவலர்
 குவடேறு புயமாட மிடருட மடியாட

— அகன்மூதுகுரமோடே,

நாலுமறை யேயாட மேனுதல்க ளாடவிய
  வீயாத வெழிலாட வழியாத குணமாட
நாகரிக மேமேவு வேடர்மக ளாடவரு
  ணயவானை மகளாட முசுவான முகனாட

நாரதம கானுட வோசைமுனி யாடவிற
  னவவீரர் புதராட வொருகாவ டியனாட
ஞானவடி யாராட மாணவர்க ளாடவிதை
  நவிருசனுடனாட விதுவேளையெணிவாகொள்

— அருண்மலிமுருகோனே.

சூலபாணியான சிவனார் ஆட, மலைமகள் ஆட, பணிவுள்ள பூதகணம் ஆட, திருமால் ஆட, பிரமனோடு கலைமகள் ஆட, இலக்குமி ஆட, தேவர்களோடு தேவேந்திரன் ஆட, ஆனைமுகனார் ஆட, இடபமுக நந்திதேவர் ஆட, நாய்வாகனரான வயிரவர் ஆட, வசுக்களும், காளியும், அவளுடைய தலைவரான வீரபத்திரரும் ஆட, கரிய எமன் ஆட, தூய வருணன் ஆட வன்மைமிக்க ஈசானரும் நிருதியும் ஆட, அரிகர புத்திரனோடு.

காலில்லாத சனிபகவான் ஆட, சிவனாரின் தோழனான குபேரன் ஆட, கனமிக்க பூதேவி ஆட, கங்கை, இந்திராணி, மன்மதனும் ஆட, அழகிய இரதிதேவி ஆட, சூரிய சந்திரர் ஆட, சர்ப்ப ராஜனான சேடனும், பேரின்பங் காணும் முனிவர்களும் ஆட, தரும தேவதை ஆட, இரு வீரகண்டைகளும் அசைந்து ஒலிக்க, அழகிய சிலம்பு ஒலிக்க, நீலமணி போன்றதும் குற்றமற்றதுமான நாததத்துவக் குறிப்புடைய மயில் ஆட, ஞானவேல் ஆட, ஒளி தரும் கைவாள் ஆட, அச்சம் தரும் சூலம் ஆட, மழுவு ஆட, வலிய கதாயுதம் ஆட,

அழகிய அரைஞாண் ஆட, நூல் அணிந்த மார்பு, ஆட, வாசம் மிக்க கடப்பமாலே ஆட, உடை ஆட, வெற்றி மிக்க கோழி தளராமல் ஆட, தோள் வளே ஆட, விளங்கும் குழை ஆட, வளே ஆட, பன்னிரு கரங்களும், பதினெண் விழிகளும் அசைய, மலர்ந்த அழகிய இதழ் ஆட விளங்கும் ஆறு சிரங்களும், கலேகள் ஓதும் நாவும் ஆட, பற்களின் ஒளி வீச மலே போன்ற மாலேகள் அணிந்த தோள்கள் அசைய, கழுத்து ஆட, திருவயிறு ஆட, அகன்ற வலி :: முதுகுடன்,

நான்மறைகள் ஆட, குனித்த புருவங்கள் ஆட, குன்ருதஅழகு ஒளிர அழகிய எண்குணங்களும் விளங்கித் தோன்ற நாகரீகமிக்க வேடர் மகளான வள்ளி நாயகி ஆட, ஞான சக்தியான தேவயானே ஆட, முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆட, நாரதமகான் ஆட, திருப்புகழ் சந்தங்களை ஓதியருளிய அருணகிரிநாதர் ஆட, வெற்றி மிக்க நவவீரர்களான அறிஞர்கள் ஆட, ஒப்பற்ற காவடியாளுகிய இடும்பன் ஆட, ஞான அடியார் களித்து ஆட, மாணவர்களும் ஆட, இவ்வண்ணத்தை அருளிய ஸ்ரீமத் குமரகுருதாசரும் கலந்து ஆட, இதுவே தக்க சமயம், ஆதலின் அருளே நிறைந்த அண்ணலே, முருகவேளே, எளியேனேயும் சிறிது திருவுள்ளத்து எண்ணி அருள் செய்ய எழுந்தருள்க. எழுந்தருளி வந்து அடியேனே ஏன்று கொள்க.

இதுவரை பஞ்சாமிர்த வண்ணப் பாடல்கள் ஐந்துக்கும் பொழிப்புரை வழங்கப்பட்டது.

இனி இவ்வைந்து பாடல்களின் கருத்துரைச் சுருக்கம் காண்போம்.

1. பால் வண்ணம்

இதில், சூரபன்மன் பெருமானுடன் சமர் செய்த மகிமை, பேய்களின் கோஷம், சூரன்வதை, பிரணவ

உபதேசம் முதலிய வரலாறு, மங்கையர் காதல், அதன் விளைவால் உண்டாகும் பலவகைப் பிணிகள் வந்தடையாமலும், இனி இவ்வுலகில் வந்து பிறவி எடுக்காமலும் மனம் குவிந்து உள்ளே உன்னை இருத்தி, உன் திருவடிகளை எண்ணிக் கடைத்தேறத் திருவுள்ளம் பற்றுவாயாக என்றவாறு.

2. தயிர் வண்ணம்

இப்பாடலானது மலைமகள், அலைமகள், கலைமகள், தெய்வ யானை, வள்ளியம்மை முதலானோர்களது சிறப்பு இயல்புகளும் வள்ளிபிராட்டியை மணம் புரிந்த மயிலேறும் இறைவனின் மாண்பும், பிறவிக் கடல் என்பது கடக்கவும், பிழை களையவும், கவிபாடவும், அதற்கேற்ப அரன்மகன் ஆடல் புரியவும், துணை நிற்கவும் வேண்டப்பட்டுள்ளது.

3. நெய் வண்ணம்

இதனில் வஞ்சனை முதலிய தீயகுணமுடையவர் உறவை அறவே வொழித்துத் தொண்டர் பதிவாழ்வை அடைவிக்கவும், சிவபிரானின் ஆற்றல் மிக்கதான திருவிளையாடல்களில் சிலவற்றைக் கூறி, அப்படிப்பட்டவரின் சேயே என்றும், மலையரசன் மகனென்றும் ஒப்பற்ற நடனம் செய்ய வல்லவனுமாகிய பார்வதி பாலா எனத் தேவர் தொழும் தேவே என்றும் புகழ்ந்து, காலன் வருமுன்னே கந்தபிரான் காட்சி தர வேண்டும் துன்பங்களை ஒழித்துப் பிழைகளை எல்லாம் பொறுத்து திருவடிகளை ஈந்தருள வரவேண்டுமென்று வேண்டுகிறார்.

4 சருக்கரை வண்ணம்

மாதம், திதி, நாள், கோள் ஆகியவை முருகன் திருவடிகளை விரும்பிப் பரவும் அடியவரும் நலமே செய்யுமாறு அருளவும், மற்றும் ஆண்டவன் அருளாரமுதினை அருந்தி

ஞோர் அனுபவமும், அம்புய, அம்பதநேயமாகிய திருவடித் தியானச் சிறப்பும், ஆறுபடைவீட்டுப் பெருமைகளும், திருமுருகனது திரித்வபாத்யமும் விளக்கி, எனக்கு உன் தெய்வ அருட்செல்வத்தை மேலும் வளரச் செய்வாயாக என விண்ணப்பிக்கிருர்.

5. தேன் வண்ணம்

இந்த வண்ணத்தில் செவ்வேட் பரமன் ஆடுகிருன் அதனுல் தேவர், முனிவர், பூதத் தொகுதிகளும், திசைக் காவலர்களும், மற்றும் செக முழுவதும் ஆடுகின்றன. மேலும் நாரதர், இடும்பன் அருணகிரி முனீந்திரர், ஸ்ரீ குமரகுருதாசர் போன்ற ஞான அடியார்களும், மாணவர் களும் ஆடிவரும் இத்தருணம், முருகா எனியேனையும் சிறிது திருவுளத்து எண்ணி அருள்புரிய எழுந்தருளி வந்துஅடியேனே யும் ஏன்று கொள்க என வேண்டுகிருர்.

பரமன் ஆடினுல் யாவும் ஆடும் என்பதற்கு விளக்கம் வேண்டுமானுல், பாசுப தாஸ்திரம் வழங்குமுன் சிவபிரான் அர்ச்சுனன் கைவில்லாலபட்ட அடியை அவன் படைப்பு அத்தனைக்கும் கிடைத்ததையும், பிட்டுக்கு ஆசைப்பட்டு மாறன் பிரம்படிபட்டதில் அனைவரும் அவ்வடியை ஏற்றதும் உற்றுணரத்தக்கது.

சுவாமிகள் தமது பதினுன்காவது பிராயத்திலேயே வேதத்தின் அந்தமாகிய ஐந்து உறுப்பால் ஜனகாதி நால் வருக்கும், பராசரர் மக்கள் ஆறு பேர்க்கும் விளக்கிய உண் மைப் பொருளை வேண்டுமென்று விண்ணப்பித்தவர். பஞ்சா மிர்த வண்ணத்தில் இனிப் பிறவாப் பேரின்பமும், பிழை பொறுக்க மனுவும், கவிபாடவும் அதற்கேற்ப அமலன் நடஞ்செய்யவும் விண்ணப்பம் செய்து வேண்டுகிருர். அதுவே நமது அனவரது விண்ணப்பமாக அமைவதாக.

இவ்வாருன விண்ணப்பங்கள் பல அமைந்த அமிழ்தினு மினிய பரமனுக்குப் பிரீதியான பஞ்சாமிர்த வண்ணப்

பாடல்களை (சிறுநூற்றிரட்டில் உள்ளபடியே) இங்கே வழங்கியுள்ளோம். எழுத்துப் பிழையில்லாமல் பாராயணம் செய்வீர்களாக. இவ்வண்ணம் எங்கெங்கு பாராயணம் செய்யப்படுமோ அங்கெல்லாம் செந்திலாதிபதி வருவார் என்ற உண்மை இப்பாடல்களுக்குப் பின் விளக்கப்பட்டுள்ளது. ஆக, இப்பாடல்களை இயன்ற அளவு இன்னோசையுடனும் உள் உருக்கத்துடனும், பயபக்தியுடனும் பாடுங்கள். பன்னிருகைப் பரமன் காட்சியைப் பெறுங்கள்.

பரிபூஜன பஞ்சாமிர்தவண்ணம் ஸ்ரீ பாம்பன் சுவாமிகளால் கி.பி. 1841க்குச் சரியான கரவருடம் கார்த்திகை மாதம் 24ம் தேதி, செவ்வாய்க்கிழமை தினம் பாடியருளப் பட்டது. இந்த ஆண்டு 1991ல் வரும் பிரஜோற்பத்திவருடம் கார்த்திகை மாதம் 24ம் நாளும் செவ்வாய்க்கிழமையாகவே வருகிறது. அந்த நாள் ஒரு பொன்னாள். பஞ்சாமிர்த வண்ணம் பாடிய நூறு ஆண்டுகளைக் கணிக்கும் நன்னாள்.

இனி, பஞ்சாமிர்தவண்ண பாராயணப் பயன் பற்றிய உண்மை நிகழ்ச்சிகளைக் காண்போமாக.

சந்தனசயிலம் என்னும் திருச்செந்தூர் ஸ்தானிகருள் ஒருவராய் 45 வயதுடைய ஈ. அனந்தசுப்பையர் என்னும் பெயருள்ள வேதியர் ஒருவர் தமது புத்தகப் பெட்டியிலிருந்த பஞ்சாமிர்த வண்ணப் பிரதி ஒன்றைக் கண்டெடுத்துப் படித்துப் பார்த்து, இதனைப் பாராயணம் செய்ய வேண்டுமென்னும் அவாவுற்றார். அவ்வமயம், வேலூரைச் சார்ந்த வாட் கொடை கிராம வாசியாய 55 வயதுடைய வ. ந. சுப்பிரமணிய ஐயரென்னும் வேதியரும் திருச்செந்தூருக்குச் சென்றவர், மேற்சொன்ன அனந்த சுப்பையர் விருப்பை உணர்ந்து தானும் அப்பாராயணத்தில் ஈடுபடக்கடவேன் என்கிறார்.

இருவரும் கந்தக் கடவுள் பக்தி மேலீட்டால் மெய் புணர்வு வாய்ந்தவர்களாகையால், அன்றைய மாலைப்

பொழுதில், அவ்வூர் கவுண்டர் மண்டபத்திற்குச் சென்று வண்ண பாராயணம் செய்ய ஆரம்பித்தனர். இது நிகழ்ந்தது காளயுத்தி வருடத்து மார்கழி மாதம் எனலாம்.

வண்ண பாராயணம் மேற் சொன்ன இருவர்களாலும் திருச்செந்தூர் கவுண்டர் மண்டபத்தில் தினந்தோறும் மாலைப்பொழுதில் தொடர்ந்து நிகழ்ந்து வருவதை உடனிருந்து செவி மடுத்து வருபவர்களில், முத்தம்மை எனும் பெயருடைய 80 வயதின் மிக்க ஒரு அம்மையாரும் ஆவர்.

தொடர்ந்த சித்தார்த்தி வருடம், சித்திரை மாதம், ஒரு குரு வாரத்து இரவு 9 கடிகைக்கு மேல், 20-22 பிராய முடையாராய்க் காசிச்சிறு செம்பொன்று கையிலுடைய ஒருவர் வந்தார். கவுண்டர் மண்டபத்தில் வண்ண பாராயணம் செய்வார்க்கும் முத்தம்மையாருக்கும் இடையே அவ் வாலிபர் சென்று சிறிது மறைவாக நின்று வண்ணம் கேட்பதைக் கண்ணுற்ற முத்தம்மை. இவர் யாரோ புதியராய் இருக்கின்றனர். யாவரேயாயினும் இங்ஙனம் நன்கு இருந்து கேட்கலாமே? அவ்வாறு செய்யாததென்? என்று அவ்வம்மையார் சிந்தித்து நோக்கியவுடன், அவ்வாலிபர் மறைந்தனர். இவ்விவரத்தை வண்ண பாராயண முடிவில் வேதியர் இருவருக்கும் அம்மையார் கூறிவிட்டு, வழக்கம் போல அன்னாரோடு திருக்கோயில் போந்து செந்திலாண்டவனைத் தரிசித்து விடை பெற்றுத் தமது இருக்கையை அடைந்தனள்.

மறுநாளாகிய, சுக்கிர வாரத்து இரவு 23 கடிகைக்கு மேலே முத்தம்மையாரின் இருக்கையினை முன் தினம் மறைந்து சென்ற திருமேனிப் பரமன் அடைந்து, அம்மையாரை நோக்கி "நீ நேற்று என்னைப் பார்த்து, இவர் யாரோ புதியவர் என்று எண்ணலுற்றனை யன்றோ! யான் இவ்வூரே; என்னுடன் வருவையேல் இருப்பிடம் காட்டுவேன்" என்றனர்.

முத்தம்மையாரும் அது காண்போம் என ஆவலோடு எழுந்து அவரோடு வீதியினை அடைந்தனர். ஆண்டு நிற்கின்ற ஓர் இளம்பருவப் பெண்ணோடும் அப்பரமர் செல்லுதலைக் கண்ணுற்ற அவ்வம்மையாரும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று கலியாண மண்டபத்தை அடுத்து நிற்கும் அவர்கள் பக்கலுல் நின்றனள். ஆண்டுப் பரமர் “கிழவீ, கவுண்டர் மண்டபத்தில் பாராயணம் செய்யப்படுகின்ற பஞ்சாமிர்த வண்ணம் இயன்றவளவில் இன்னோசை எழப் பாடப்படல் வேண்டும். நீ அவர்களுக்குச் சொல். அவ்வண்ணம் எனக்குப் பிரீதியாயுளது. அஃது எங்கே பாராயணம் செய்யப்படுமோ, அங்கே யான் வருவேன், இருப்பேன், ஆகலின் அம்மண்டபத்திற்கு வந்தேன். என்னுடைய இருக்கை இக்கலியாண மண்டபமும், வசந்த மண்டபமும் கோவிலுமாகும்” என்று ஆங்குள்ளவற்றைச் சுட்டிக் காட்டி அவ்விளம்பருவப் பெண்ணோடும் மறைந்தருளினர்.

முத்தம்மையார், ஆஅ, பெருமானே, பெருமானே, என்று கூவி, அவ்விடத்திலே பஞ்சாங்க நமஸ்காரம் புரிந்து, எழுந்து, பன் முறையும் கும்பிட்டு, தனது இருப்பிடம் அடைந்து, தூங்காதிருந்து, பொழுது விடிந்த பின், இறைவனைத் தொழுது, வெளியே போய் வேதியர் இருவரையும் கண்டு மேற்சொன்ன இறைவன் கட்டளையை வெளியிட்டனள். அது செவிமடுத்த பக்த சிரோன்மணிகளாகிய அவ்விருவரும் விம்மிதமடைந்து, வண்ண பாராயணம் நிமித்தம் திவ்ய திருவடித் தாமரைகள் புழுதியணையப் பிராட்டியோடும் பூமிசை நடந்து வந்தருளிய பெருங் கருணைத் தடங்கடலுக்கு அநேக வந்தனம், அநேக வந்தனம் என்று கூறி வணங்கினர்.

அவ்விரு வேதியருள், அனந்த சுப்பையர் என்பார் பாராயண வண்ணப் பிரதியைப் பூசையில் வைத்துக் கொண்டு வேறு பிரதியொன்றைப் பாராயணத்திற்குத் தேடிக்கொள்வாராயினர்.

மேற் சொன்ன விவரம் உணர்ந்த ஒரு பிராமண சந்நியாசியானவர், தமது மௌன நிலை கெடாது மானசிகமாக அவ்வண்ண பாராயணத்தை மேலை வசந்த மண்டபக்கண் இருந்து சின்னாட்களாக செய்து வருங்கால், ஒரு சமயம் சிறு பிராயத் திருவுடையான் ஒருவன் காதுகளிற் குண்டலங்கள் பிரகாசிக்க எதிரில் நிற்கக் கண்டு, அவனடி மலரை இனிது வணங்கினர். உடனே அவன் மறைந்தருளின்.

இவைகளால் இந்தப் பஞ்சாமிர்த வண்ணத்தை நன்கு மதித்து நடப்பவர், செவ்வேட்பரமன் திருவுள்ளத்திற்குப் பிரீதியுடையவர் ஆவர் என்பது அறியக் கிடக்கின்றது அல்லவா?

மேற் சொன்ன விவரங்களை, அக்காலை சென்னையில் வாழ்ந்து வத்த ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் திருச்செவிகளில் சேர்க்கப்படவும் சுவாமிகள் தமது மகிழ்ச்சியைப் பாடலாக வடித்ததைக் கீழே குறிக்கின்றோம்.

பரிவாளர்க ளங்கோதொரு பஞ்சாமிர்த வண்ணம்
இரியாவென துளநச்சினி தாமென்றொரு கிழமைப்
பெரியாண்முனம் வந்தோதிய செந்திற்பெரு மானே
வரிமாமறை யிறைவாவெனை மறவேலெனை மறவேல்.

இப்பாடல் சுவாமிகள் அருளிய ஆறுவது மண்டலத்தைச் சார்ந்த "பெருவேண்டுகோள்' எனும் பதிகத்தில் இடம் பெற்றுள்ளது. மற்றும், அதே ஆறுவது மண்டலத்தில் உள்ள "திருவடிவயா" எனும் பகுதியிலும் பஞ்சாமிர்த வண்ணத்தின் மகிமையைப் பற்றிச் சுவாமிகளே விளக்கியுள்ள செய்யுளையும் கீழே வரைந்துள்ளோம்.

பஞ்சா முதவண்ணமதென் பரிவாய்
விஞ்சா ரமுதென் றுவிளம் பியவாய்
மஞ்சா ரொருசெந் திலன்மா ணடியை
நெஞ்சா லொருசீ வனினைந் ததரோ.

—ஓம்—



நூல் கிடைக்குமிடம்

1. டாக்டர் ப. இராமன் M.A. Phd.

44, இராமகிருஷ்ண மடத்துச் சாலை, சென்னை-4

2. டாக்டர் M. K. விஸ்வேஸ்வரன்

5, பச்சையப்பன் கல்லூரி விடுதி சாலை
சேத்துப்பட்டு, சென்னை.

3. A. கிருஷ்ணஸ்வாமி

துணை ஆணையர் (ஓய்வு)

55, அண்ணா காலனி பெசன்ட்நகர், சென்னை-90